KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஹு ஜூன் மீ 20 உ [No. 25

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 385
2. வில்லிபாரதம் (சாத்தகி)
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 387
3. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 9-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 388
4. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 3.)
Shakespeare's 'Othello' 390
5. கலித்தொகை (மருதக்கலி 6.)
T. A. கனகசபாபதி முதலியார் 391
6. சூரியன் (பகல் நக்ஷத்திரம்)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 392
7. தமிழ்மொழியைக் குறித்த பழய குறிப்புக்கள்
S. சோமசுந்தர தேசிகர் 394
8. அட்டவணை 398
9. பிஸாரோ நாடகம் 400

க லா நி ல ய ம்

வித்தகமும் வித்தைகளும் 5.

அரசியல் வாதங்களின் அமைதியின்மையை எடுத்துக் காட்டி இக்கலாநிலயம் இதன்முன் பல இடங்களில் விளக்கியிருக்கின்றது. அவ்விடயத்திலும், பேசும் படக்காட்சி முதலியவைகளின் விடயத்திலு மிக்கலாநிலயத்தின் கருத்தோடு, ஜோட் என்பவர் தம் கருத்தும் பெரும்பாலும் ஒத்திருப்பதை இனிக் காணலாம். கூறுகின்றார் அவர்:—

Highest Common Factor Appeal in Cinema. The decline in the art of the cinema since the arrival of the 'talkies' exemplifies the same point. The average cinema entertainment is, it is notorious, now such that no intelligent person can sit through it without intolerable humiliation. The reason is simple. It costs some forty thousand pounds to make even the simplest 'talkie'. Hence, if a 'talkie' is not to be a financial failure, it must be capable of being shown a large number of times to great masses of people. It must, therefore, appeal to those elements which great masses of people have in common.

Now the part of me which I share with an up country 'hick' consists of my fears and my appetites; it is grounded in my genitals, flanked by my kidneys and maintained by my stomach. It is a very dull part, being very like the equivalent parts of thousands of other middle-aged men. It follows, therefore, that a film which bases itself on what is common to me and the Hollywood hick will be a dull and boring film. Whatever depends for its success on its ability to attract the attention and win the admiration of average people, cannot, it is obvious, rise above the common level of those to whom it appeals.

Now all people, however otherwise diverse, have one element in common; this is sex, the highest common denominator of all differences between individual men and women—sex and its *Spiritual counterpart morality, which is the sour grapes of sex.* Morality, like sex, tends to be much the same among all peoples because the herd, whose special emanation it is, is always and everywhere the same. Intellect gives off fresh lights in every age because the intellectuals of one society may be fundamentally different from their predecessors and their successors. It is reason which changes; desire which remains constant, desire and morality which is the obverse of desire.

And in Politics. This casual damning of the cinemas sounds like a digression. It is yet the digression has a bearing upon my theme. Returning to it, I observe that the transaction of the affairs of a modern community is a highly skilled task, calling in a pre-eminent degree for the exer-

cise of those talents and faculties, courage and fore thought, intelligence, determination and knowledge, originality of thought and breadth of outlook by which a few, and only a few. members of our species in each generation are distinguished. And the lesson to be learned from the 'talkies' is that it is as idle to expect these qualities to be displayed by those whose power depends upon their ability to appeal to the average voter, as it is to expect high art in a form of entertaimment which appeals to the average audience. Politics, as we know it to-day, is contemptible for the same reason as the 'talkies' are contemptible. Being based upon the goodwill of the average, it must appeal to the common denominator of passion and interest which all share alike, and not to the reason in respect of which each man is different from his fellows.

It will, of course, be said that the clever man can descend to the level of the electorate, and use reason to plan the appeal to unreason. This, no doubt, is true up to a point. An Alcibiades or a Disraeli can always score a first-rate popular success with the mob, so long as he succeeds among his own kind; but as soon as he falters, his supporters turn against him and vie with each other in vilifying the man they acclaimed. The unconscious spite, which inferior persons nourish against men of superior ability or talent, forbids them to neglect any opportunity of taking it out of those who make them feel conscious of their inferiority. For this reason they will bear more readily with the failures of those who really represent them, *the George III's and Gladstones of history*, than with the success of those whose unsparing contempt they sense under the affable demeanour of the popular demagogue.

Even if a democracy is prepared to place its trust in a leader of intelligence, it forbids him to exercise it. Measures which arouse passion provide a better foundation in popular support than those which appeal to reason, and the skill of the politician consists, therefore, in knowing which passions can be aroused most easily. Most of the really sweeping elections of recent years have been fought on issues such as Hanging the Kaiser, Making Germany Pay, the Zinovieff Letter, and the Post Office Savings Bank Scare, which were not only destitute of the possibillity of practical application or of any basis in reality, but were known to be so by those who formulated them. It is on issues of this kind that politicians thrive. Hate, fear and spite are the most potent driving-forces in large masses of people, and when they cannot be directed, as in war-time, against an external enemy, they must be turned against the members of other classes or against other politicians. Thus politicians prosper by dividing the nation into rival groups and exploiting its division into rival classes, since by this means the evocation of unreasoning passions is facilitated. Hence governments, whose powers are based upon appeals to unreason will concentrate upon whatever measures are easy to explain and which make for rivalry and division between nations or different sections of the nation. There seems to be no reason to think that there is any identity between those measures which are salutary and those which fulfil these two conditions.

இவ்வாங்கில வாசகங்களின் பிண்டப்பொருள் பின்வருமாறு:—

சாதாரண அறிவுடைய எவனும், ஆற்றமாட்டா அவமானத்தோடல்லாமல் எந்த ஸினிமாக் காட்சியிலுல் உட்கார்ந்திருக்க முடியாது. இதற்குக் காரணம் மிகச் சுலபம். 40000 பவுன் செலவு செய்து ஒரு டாக்கி படம் எடுக்கப்படுகிறது. படம் எடுத்த முதலாளிகள் நஷ்டப்படாமலிருக்க வேண்டுமானால் பெரும் பெரும் தொகுதியாக அதனைப் பார்ப்பவர் வரவேண்டும். ஜனங்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயினும் எந்தநிலையில் இருப்பவர்களாயினும் எல்லாருக்கும் பொதுவாக, ஆண் பெண் இணைவிழைச்சு என்னும் ஒன்றே என்றும் நிற்கின்றது. டாக்கிக் காட்சிகளில் இதற்கு இடம் இருந்தால்தான் ஜனங்கள் கும்பல்கும்லாகத் திரளுவார்கள். ஆகையாற்றான் ஆண் பெண் ஊடாட்ட அவலச் செய்திகளையே ஆதாரமாகக் கொண்டு அவை பிழைக்கின்றன. பொது ஜனங்களின் ஆதரவை அவை பெறவேண்டுமானால் அவர்களுடைய காமக் குரோதாதிகளுக்கு உணவு அளித்துத் தூண்டுவதையே உபாயமாகக் கொள்ள வேண்டும்.

ஸினிமாவைப் பற்றிச் சொன்ன இது அரசியல் வாதிகள் கையாள்கின்ற முறைகளுக்கும் ஒக்கும். மெய்யறிவு நல்லறம் கருணை நீதி முதலியவைகளைப் பற்றிப் பொதுஜனங்களினிடையே பேசினால் அது அவர்களுடைய செவிகளில் ஏறுவதில்லை. மற்று, பொதுஜனங்களின் அபிமானத்திலேயே அரசியல் வாதிகள் செழிக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். இவர்களுடைய இரண்டு கண்களும் எப்பொழுதும் ஒட்டுப் பெட்டியின் ஒட்டையையே பார்த்திருக்க வேண்டியதாகின்றது. ஆகையால், அறிவையும் அறத்தையும் தம் உதவிக்கழைக்காமல், பொது ஜனங்களின் மனோசபலங்களையே தூண்டிவிடும் வகை தேடித் திரிகின்றவனாகின்றார். பகை, பயம், பொறாமை, பேராசை ஆகிய இன்னவைகள்தாம் பொது ஜனமனத்தைச் செலுத்தும் ஆற்றலுடையவை. யுத்தகாலங்களில் இவைகளைப் பகைநாட்டின் மீது ஏவிவிடுகின்றனர். யுத்தம் இல்லாதபோது உள்நாட்டிலேயே வேறுவேறு வகுப்பினர்கள் மீதேனும் கட்சிகளின்மீதேனும் செலுத்தவேண்டியிருக்கின்றது. இன்னபடி, ஜனங்களை மாறுபட்ட தொகுதிகளாகப் பிரித்து, அறிவற்றசபலங்களைக் கற்பனைசெய்து, ஒருவருக்கொருவர் பகை மூட்டியே அரசியல்வாதிகள் கொழுத்து வளர்கின்றனர்.''

* * *

இவ்விதழினோடு இவ்வாண்டின் முதல்ஆறுமாதம் முடிகின்றது. 'ஜூன்மாதத் திறுதிவாரம் நம் காரியாலயத்திற்கு ஓய்வுநாளாகையால், இதற்கடுத்து ஜூலை 4உ இதழ் வரும்.

வில்லிபாரதம்

[377-வது பக்கத் தொடர்ச்சி]

சாத்தகி

திட்டத்துய்மனைப்போல் மற்றொரு போலிவீரன் சாத்தகி; ஆயினும் ஒருவிதத்தில் இவ்விருவருக்கும் வேற்றுமையுண்டு. திட்டத்துய்மனது நேர்த்தியான போர்த்தோற்றமாவது அதிட்டமாவது இவனுக்கில்லை. ஆதலின் இவனைச்சேனாதிபதியாக்க ஒருவரும் முற்பட்டிலர். மேலும், திட்டத்துய்மன் தனது ஆற்றல்களைப்பற்றி என்னநினைத்திருந்தானோ அறியோம். ஆனால் சாத்தகிக்கோ தன்னிலும் சிறந்த வீரர் ஒருவரும்இலர் என்னும் எண்ணம் மிகவுண்டு. ஆதலின் தருமராசன் கண்ணனை நாடு வேண்டுமாறு முன் தூது போக்க நினைத்தபோது, வீமன் விசயன் முதலோரும் பயிற்றாத வீர தோரணையில்,

சண்டமுகி லுருமனைய சராசந்தன் தனக்கஞ்சி
வண்டுவரை யரணாக வடமதுரை கைவிட்ட
திண்டிறல் மாதவன் மதியோ திகழ்தருமன் தன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய் வேண்டுவது

என்று, நாடிரக்கத் துணிந்த் தன் அண்ணனுடைய வீரமின்மையையும், தருமனது கோழைநெஞ்சையும், வெகு அலக்ஷியமாக எள்ளியுரைக்கிறான். ஆனால் பாவம்; சாத்தகியைப் போன்றதொரு அரிய தம்பிதான் இருந்து மன்றோ கண்ணன் சராசந்தனுக்கு அஞ்சியோடலானான்? இந்திரசித்தனுடைய தலையைஇராமனது தாளிலிட்டு வணங்கிய இலக்குவனைக் கண்டு அந்தத் திருமால்,

'தம்பியுடையான் படைக்கஞ்சான்'

என்று கூறி யார்த்ததுபோல், இந்தத் திருமாலுக்கு அவ்வாறு களிமிகுவதற் கேற்ற சமயம் வாய்க்கவோ இல்லை போலும். மற்று, அச்சமயமெப்படிவாய்க்கும். உத்தரகுமாரனைப் போன்றதொரு திண்மையற்ற, அற்ப வாய்வீரம் பேசும் ஹாஸ்ய கதா பாத்திரமேயன்றி, இச்சாத்தகிக்கு மிகுதியாக என்னவீரமுண்டு? திரௌபதியைப்போன்ற ஒரு ஆண்மை மிகுந்த வீரமகள்முன் மேற்கூறியவாறு பேசியிருப்பானேல்,— அவ்வாறு அவள்முன் தான் பேசினான். ஆனால் புருஷனின் அத்தைமகனென்ற மரியாதை முறைமை ஒன்று குறுக்கிட்டிராவிட்டால், உத்தரகுமாரனைப் போல், இவனையும் அவள் அளவற்ற பரிபவம் கண்டிருக்கலாம். மேலே அத்துணை இடம்பமாகப்பேசிய சாத்தகி பாரதப்போர் தொடங்கியவுடனே, எல்லா வீரர்களுக்கும் முன்னணியில் நின்று சிவேதனைப் போல் வீடுமனையுமன்றோ புறங்கண்டிருக்க வேண்டும்? ஆனால் இவனோ அத்தனைநாள் போரிலும் ஒருவருடனும் மிகுதியாகப்போர்செய்யாததுமல்லாமல், ஒரு சிறிது வில்லெடுக்க நேர்ந்தாலுந்தான் வீமன்விசயன் முதலியோர் யாராவது அருகிலிருந்தாலல்லது, போரே செய்யாததுமாகஇருந்தான். அவர்களுடன் சேர்ந்து அட்டகாசமாகக் கும்பலில் கோவிந்தம் போடுவானேயன்றி ஒரு போரிலேனும் தனி நின்று ஒரு வீரனுடன் சமராடினானென்பதில்லை. ஆனால் விசயனிடம் கல்வி பயின்றதனால், தான் அவனுக்கு ஏறக்குறைய நிகரான மகாவீரனென்பது இவனெண்ணம். இன்னும் கேட்பின் ஒருவேளை,

"பரசுடை யிராமன் பாத பங்கயம் சென்னி யேந்தி
வரிசிலைவேதம் கற்று மற்றவன் தன்னையும்வென்ற"

வீடுமனைப்போல், விசயனிலும் தான் வீரனென்று இந்தச்சாத்தகி நினைத்திருந்தாலும் இருக்கலாமல்லவா? இவனையும் உத்தரகுமாரனையும் போன்ற சிறுமதிகளின் உள்ளங்கள் எந்தக் கருத்தினைத்தான் ஓர்ந்து தெளியத்தகும் திண்மையுடையன? போரில் இவன் சிறிது அசாக்கிரதையாக இருந்திருப்பானானால், உத்தரகுமாரனுக்கு நேர்ந்ததுபோல், இவனுக்கும் மிகுந்த பரிபவம் நேர்ந்திருக்கும். ஆனால் சுற்றுமுற்றும் பார்த்தேதான் இவன் வீர முழக்கம் செய்வானெனின், இவன் எவ்வாறு அகப்பட்டுக் கொள்வான்? இவனது வீரமின்மையை விளக்க இன்னும் சில விஷயங்கள் கூறுவேன். பதினான்காம் நாள் போரில் விசயன் பகைவரது வியூகம் பிளந்து, சேனைகளைச் சிதறடித்துக் கர்ணனையும் அடித்தோட்டியபோது, துரியோதனன் துரோணாசாரியரிடம் சென்று முறையிட்டு இறைஞ்சி அவரிடமிருந்து பிளத்தற்கரிய நெடுங்கவசமொன்றை யணிந்து, விசயனெதிர் சென்றான். விசயனது அத்திரங்கள் யாவும் அக்கவசத்தின் முன் பயனற்றொழிய, வேலினாலேனும், அக்கவசம் இறுமோவென்று, வேலொன்றினையேவ, அதனைத் தாமன் தனது அத்திரத்தினால் இரண்டாக்கினான். அப்போது கண்ணன் புதியதோர் வேலினை விசயன் கையிலளித்துத் தன் சங்கத்தினை முழக்க, அச்சங்கொலியின் மோகத்தினால் அனைவரும் செயலற்று நின்றபோது, விசயன் அற்றம்பார்த்து, வேலையேவித் துரியோதனனது கவசத்தைப் பிளந்தான். இச்சங்கொலியைத் தருமன் கேட்டனன். கேட்டதும், வலியதொரு இடையூறு நேர்ந்தாலன்றி இவ்வாறு சங்கம் முழக்கப்படாதென்று நினைத்து, சாத்தகியைத் துணையாக ஏகச் சொல்லினன். சுத்த வீரனானவன், போருண்டெனிற் பூரிக்கும் தோளினன், 'நானிலமதனில் உண்டு போரெனின் அச்சொல்லைத் தேனினும் இனிதாக்கொள்ளும் சிந்தையன்' *உடனே புறப்பட்டேகுதல்தான் தகுதி. ஆனால் துரோணன் கர்ணன் முதலிய வீரர்கள் தலைமை வகித்த அரண்கள் பலவற்றினைக் கடக்கவேண்டியதையறிந்த சாத்தகி, திறுதிறென்று விழித்துக் கடைசியாக,

கண்ணுற நில்லார் கடவுளர் முதலாம்
விண்ணவ ரேனும் விசயன் முனிந்தால்
மண்ணி லெதிர்க்கும் மன்னவர் யாரோ
தண்ணளி நெஞ்சம் தருமமு மிக்கோய்

நின்னணி காவற் கென்னை நிறுத்திப்
பின்னணி மீது பெயர்ந்தன னும்பி

என்று தன்னுடைய பொறுப்பைப் பற்றிக் கூறிக் காலந் தாழ்ந்தனனேயன்றி, அடுத்தபடியாக வீமன் சென்றதுபோல், 'சொன்ன வார்த்தையும் பிற்பட'க் கடிதின் ஏகினானல்லன். உடனே தருமனும் 'சேனை

* இக்காலத்தில் பண்டங்களை மிகுதியாகத் தேக்கிய வணிகர்தாம் 'நானிலமதனில் உண்டு போரெனின் அச்சொல்லைத் தேனினும் இனிதாகக் கொள்ளும் சிந்தைய' ரன்றோ?

நாதன் நின்றெனைக் காக்குவன்' என்று உரைப்பச் சாத்தகியும் ஏகினன். ஏகினவன் அச்சமிகுதியால், இருபுறமும் பார்த்துப் பார்த்துச் சென்று, துரோணனை நெருங்கியபோது, உபாத்தியாயரை ஏமாற்றியப்பால் செல்ல யோசிக்கும் ஒரு பள்ளிச்சிறுவனைப் போலப் போரிடாமல் நழுவிவிட எத்தனித்தான். அவரும் உபாத்திமைத் தொழில் பூண்டவராதலால், அவனது முயற்சியைக் கண்டுகொண்டு, போரினை வெறுத்து நின்றதோர் நிலையிலிருந்தனரேனும், அச்சிறு பயலுடன் போராற்றியே தீர்வோம் என்று உன்னி 'ஏகல், ஏகல் என்னுடன் அமர்செய்யாதேகல்' என்றார். வழிமறிக்கப்பட்ட சாத்தகி ஆடு திருடிய கள்ளனைப்போல் விழித்தான்; எனினும் விட்டுவிடாமல்,

> ....வேதியருடன் போர்
> மோகாப்பது தகுதியன்றெமகென...

க்ஷத்திரிய வீரர்கள் வேறு ஒருவரும் பயின்றிராத வீரவாசக மொன்று இயம்பினன். களைத்து நின்றிருந்தனனாதலின் துரோணனும் அவனிடம் வெகு நேரம் போரிடாது விட்டான்; ஆனால் அதுவே ஆகுலம் தருவதாக விருந்ததென்பதை "ஆகுலம் படத்தகைந்தனன் ஆசான்'என்பார் கவிஞர். விடுபட்டதும், சாத்தகி மேலே சென்று, அங்குக் கன்னன் நின்றதைக் கண்டு மேற்செல்லத் துணிவுபெறாது நின்றான். ஆனால் அதிட்டவசமாக அதற்குள் வீமன், துரோணனைத் தேரோடும் தூக்கி யெறிந்துவிட்டு, சாத்தகியைச் சேரவே, வீமனுக்கும் கர்ணனுக்கும் போர் நேர்ந்தது. காலையில் விசயனது நெடுவாளி யொன்றினால் மார்பம் பிளந்த கன்னன் வீமனுக் கெதிராற்ற முடியாமல் நின்றனன். பின்னர், கன்னன் நொந்தேக, வீமனும் சாத்தகியும் விசயனைச் சேர்ந்தனர். சேர்ந்தவுடன் அருகிலிருந்த தன் துணைவீரர்களைக் கண்ட சாத்தகி, போருற்சாக முற்று, சாயமிட்ட நரியைப் போல், இனம் மறந்து, பூரிசிரவன் என்னும் அதிரதனுடன் போரிட்டான். பூரிசிரவன், வீடுமன், துரோணன், அவன்மகன் என்னு மிவரோடு சேர்த்து எண்ணப்படும் அதிரதவீரனவன். அவனுடன் சாத்தகி போரிட்டானெனில் சாத்தகிக்குப் பரிபவமன்றி வேறு யாதுவாய்க்கும்? தனது தம்பி அவ்வதிரத வீரனது வாளிகளால் துன்புறுவதைக் கண்ட கண்ணன், விசயனை வாளியேவிப் பகைவனது புயத்தைத் துணிக்குமாறு கூறினர். அது மன்னறம் அன்றென விசயன் முதலில் வாளாவிருந்தான். ஆனால், கண்ணனே வற்புறுத்திக்கூறவும், அம்பு தொடுத்துப் பூரிசிரவனின் திண்புயம் துணித்தான். அவ்வாறு அவன் துணித்தானெனில், சாத்தகியும் ஒரு சுத்த வீரனாயின், வீராவேசம் பொங்கி, தான் செய்த போரில் தலையிட்டதற்காக விசயன்மீது பாய்ந்தன்றோ வெஞ்சினம் தீர்வான். தனது போர்களில் சிலசமயங்களில் தலையிட்டுத்தன்னைக்காப்பாற்றியதற்காகவிசயன்,கண்ணன்மீது அளவிலாதகோபங்கூர்ந்ததுண்டு இவ்வாறே அபிமனும்வீமனுடன்,என் ஆண்மைஎன்னும்என்று வெகுண்டதுண்டு. ஆனால் சாத்தகியோ அவ்வாறு ஒன்றும் வெகுளாமல், தலைதப்பியது தம்பிரான் புண்ணியமென்று, அகங்களித்து, புயந்துணிவுண்ட பூரிசவாவைப் பின்னும் பல வாளிகளால் அடித்து வாகைமாலையை மௌலி மிலைச்சி வெற்றி கொண்டாடினன். எத்தகைய தருமப் போர், என்னவீரம் என்ன ஆண்மை! ஆ, ஆனால் விசயன்மீது நேர்மையானதொரு சினங் கொள்ளாத இவன், திட்டத்துய்மன் நிராயுதனாயிருந்த துரோணனைத் தலைதுணித்தபோது மாத்திரம் அளவில்லாத சீற்றத்துடன் பொங்குகின்றான். தன்பொருட்டுக் கொள்ளாத சீற்றம் பிறர்பொருட்டன்றோ இவன் கொண்டான்? இவ்வாறே, இராமனுக்கு மகுடமில்லை யென்றறிந்த தம்பி, இராமனது நயமொழிகளையும் மேற்கொள்ளாது 'விதிக்கு விதியாகும் என்சரம்'என்று விதியையும் புறக்கணிக்கும் சீற்ற மிகுதியைக் காட்டினவன், வனத்தின்கண் சீதை தன்னை, 'ஆடவனாகிய ஒரு நீ என்னயல் நிற்றியோ' என்று கடுஞ்சொல் கூறியபோது, தன்னைப்பற்றியே அவள் கூறினளாதலின், 'விதியின் செயலை யாரே கடப்பார்' என்று அமைதிவாசகம் இயம்பித் தன் பொருட்டல்லாது,பிறர்நலங் கருதியே சீற்றங்கொள்ளும் இளையபெருமாளது செம்மைசேர் சீற்றத்தைப் பற்றி (Righteous indignation) கருத்து நயம்படக் கூறுவர் ஸ்ரீமான் சேஷாசலம் அவர்கள். திருமால் தம்பியாகிய சாத்தகியும், தன் வீரம் பழுதாவதையும் உன்னாது பிறர்வீரம்பழுதடைவதேயென்று பிறர்பொருட்டே சீற்றங்கொள்ளும் பெருந்தகையேயன்றோ? அல்லது இருவருக்கும் ஏதாவது பேதம் தெரிகின்றதா?

இத்தகைய மனிதப் புன்மைகளையும் அழுக்குக்களையும் பற்றிச் சிந்திப்பதேன்? இந்த 'வண்ணத்தியழுக்குக்களை' நாம் காணவேண்டுவதில்லை. மனிதப் புன்மைகளைச் சித்தரிப்பது சிறந்த கலைநலமாகாது என்று விளம்புவர் சிலர். ஆனால் உலகவியல்பினையும் மக்களியல்பினையும் படம்பிடித்துக் காட்டுவதே கவிவரனது தொழிலாதலின், இந்த அழுக்குக்களைத் துடைத்தெழுதுவது அவனது கவிதாசித்திரத்தின் உண்மையைக் குறைக்கின்றதென்பர் வேறு சிலர்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

7-ம் பத்து, 9-ம் தசகம்

[374-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பாசுரம்

வைகுந்தநாதன் என் வல்வினை மாய்ந்தறச்
செய்குந்தன் தன்னை என்னாக்கி என்னால்தன்னை
வைகுந்த னாகப் புகழவண் தீங்கவி
செய்குந்தன் தன்னை எந்நாள் சிந்தித்து ஆர்வனோ?

உரை:—வைகுந்தநாதன் - எல்லாக் காலத்திலும் யாதுமோர் கலப்பில்லாத பூர்ணாநந்த மநுபவிக்கும் எல்லா விபூதிகளுக்கும் நாதனானவன், என்-நற்குணமில்லாத அடியேனுடைய, வல்வினை - தொலைக்கக் கூடாத அநேக பாபங்களை, மாய்ந்து - கொஞ்சம் கூட என்னைத் தொடர்ந்து தீச்செயலுக்குய்க்காமல் அடியோடே, அற-துடைத்து,செய்-நீக்கும், குந்தன்-குந்தபுஷ்பம் போல் பரிசுத்தனானவன், தன்னை என்

ஞக்கி-என்னைத் தன்ஞக்கி என்று மாற்றி அந்வியக்க, என்னல் தன்னை, வைகுந்தனை - மேல்கண்ட மேல் நாட்டு நிர்வாஹனை, புகழ - துதிசெய்ய (ஆழ்வார் என்ற மஹான் பாடியதாலே ஸ்ரீமந்நாராயணனுக்கு வைகுண்டாதிபத்தியம் ஸித்தித்ததின்றதாகத் தொனி) வண் - சக்தியுள்ள, கவி - புகழ்களை, செய்குந்தன் - தன்னைத்தானே பாடிக்கொண்ட, குந்தம் பூப் போல் சுத்தனனவனை, சிந்தித்து- "பூர்வ காலத்தில் ஸகல லோகங்களையும் காத்தளிக்கும் நாதனை ராமபிரான் இக்காலத்தில் வானரராஜாவான சுக்கிரீவனை நாதனைகத் தேடினனென்று சொல்லும் கணக்கிலே, பகவானின் நைச்சியத்தை ஆராய்ந்து பார்த்தால், எந்நாள் ஆர்வேன-எத்தனை காலம் யோசித்தாலும் திருப்தியடைய ஏலா தென்கிருர்.

8-ம் பாசுரம்.

ஆர்வனே ஆழியங்கை எம்பிரான் புகழ்
பார்விண் நீர்முற்றும் கலந்து பருகினும்
ஏர்விலா வென்னைச் தன்ஞக்கி என்னல் தன்னைச்
சீர்பெற வின்கவி சொன்ன திறத்துக்கே.

சென்ற பாசுரத்தில், பகவான் தன் பாவங்களைத் தொலைத்துக் க்விகள்பாட யோக்கியதை உண்டாக்கினனென்று புகழ்ந்தவர், தனக்குத்தான் "சீர்பெற" உளனகும்படி கவிபாடின சாமர்த்தியத்தின் குணதிசயத்தை எத்தனை காலம் அநுபவித்தாலும் திருப்தியடைய முடியாதென்கிருர்.

இரண்டாவதடி:—பார் - பூமியிலுள்ள ஜனங்கள், விண் - மேல் உலகங்களிலுள்ள ஜனங்கள், நீர்-தண்ணீரிலுள்ள ஜந்துக்கள், எல்லாரும் பகவானின் இத்தத் திறமையின் ரஸத்தை (கலந்து)ஒருங்கு கூடித் தங்கள் வாயால் குடித்துப் பருகினலும், அதாவது தன்வாய்கொண்டு மாத்திரமல்லாமல் எல்லா உலகத்து ஜன்மங்கள் வாய்கள்கொண்டு குடித்தாலும்தம் தாஹம் அதாவது மனத்தின் ஆசை பூர்ணமடையா தென்கிருர்.

9-ம் பாசுரம்

திறத்துக்கே துப்புரவாம் திருமா லின்சீர்
இறப்பெதிர் காலம் பருகினும் ஆர்வனே
மறப்பில்லா வெனைத்தன் ஞக்கி என்னல் தன்னை
உறப்பல இன்கவி சொன்ன திறத்துக்கே.

பொழிப்புரை:—அஞ்ஞானத்துக்கும் கூட ஒதுங்கியிருக்க இடந்தரச் சக்தனல்லாத வென்னைத் தன்னைப்போல ஸர்வஞானத்திலும் நிறைந்தவனக்கி என்னைக்கொண்டு பிராட்டியும் தானுமாகத் திருவாய்மொழி பாடின விம்மஹோபகாரத்தை முன்பு சொன்னபடி ஸர்வ உபகரணமுடையவனைக் கொண்டு எதிர்காலம் நிகழ்காலம் இறந்தகாலம் எல்லா மநுபவித்தாலும்தான் ஆர்வனே, என்கிருர்.

குறிப்பு:—I. இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் எடுத்துப் பேசியது நிகழ்காலமுள்ளடங்கியிருப்பதுபற்றி உரைக்கவேண்டியதில்லையென்று திருவுள்ளம் II. மறப்பில்லா என்னை - ஞானமே சூனியமான தன் போலியர்க்கு 'நினைவு' உண்டாயிருந்தாலல்லவோ "மறப்பு"க்குப் பிரஸக்தி - ஒருவிதமான ஞானத்துக்கும் ஆசிரயமில்லாதவரைப் பொருத்தமான பற்பல ஞானமும் குணமும் பொருந்திய கவிகளைப் பாடுவித்தானென்று திருமாலின் சக்தியில் வியப்படைகிறபடி.

10-ம் பாசுரம்.

உதவிக்கைம்மாறு என்னுயிரென்ன உற்றெண்ணில்
அதுவும் மற்றாங்கவன் தன்னது என்னல் தன்னைப்
பதவிய வின்கவி பாடிய வப்பனுக்கு
எதுவும் ஒன்றுமில்லை செய்வது இங்குமங்கே.

"இப்படி யென்னைக்கொண்டு திருவாய்மொழிபாடுவித் தருளின விம்மஹோபகாரத்திற்குக் கைம்மாருக என்னுத்மாவை யவனுக்கு அடிமையாகக் கொடுக்கவேண்டில் அதுவும் பண்டே அவனுக் கடிமையாதலால் இங்குமங்கு மிதுக்கொரு கைம்மாறுசெய்யலாவதில்லையென்று அவனுடைய மஹோபகாரத்தை யநுபவிக்கிருர்"— ஆருயிரப்படி.

11-ம் பாசுரம்.

இங்கு மங்கும் திருமாலின்றி யின்மைகண்டு
அங்ஙனே வண்குரு கூர்ச்சட கோபன்
இங்ஙனே சொன்ன ஓராயிரத் திப்பத்தும்
எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே.

உரை:—இங்கும்-இவ்வுலகில் பக்தனைப் பகவானைச்சார்ந்து திருவடிகளி லணையும்காலத்திலும்,அங்கும்-மற்றுமோக்ஷதசையிலும், திருமாலின்றி-பக்தியோகத்தைப் பூர்த்தி செய்யவும் வைகுண்டத்தில் அதன் பயனை மோக்ஷானந்தத்தை அநுபவிக்கும் காலத்திலும், அங்ஙனே - இங்ஙனே திருடபுத்தியுடன் நாள் கழிப்பதிலே, வண் - விலக்ஷணமான ஞானத்தையுடைய,குருகூர் சடகோபன், இங்ஙனே சொன்ன ஒப்பில்லாத ஆயிரம்பாட்டில் இப்பத்தும், எங்ஙனே சொல்லினும் - பாவம் ரஸம் இவைகளை அறிந்தோ அறியாமலோ சொல்லினும்,இன்பம் பயக்கும் - பேரின்பத்தைக் கொடுக்கும்.

குறிப்பு:—நற்கதியான ஆநந்தம் பகவான் ஆழ்வாரைக் குருவாகப்பற்றிஇத்தசகத்தைஅப்பியஸித்துச் சொல்வதால் கொடுப்பாரென்று திருவுள்ளப்பட்டு உரைக்கிறபடி.

"இத்சகத்தை ஸ்ரீமணவாள மாமுனிகள் பின்வருமாறு ஸங்கரகித்துள்ளார்.

"என்னைநீ வைத்தது எதுக்கென்ன மாலும்
என்தனக்கும்என் தமர்க்கும்இன்பமதாகநற்கவி
பாடவெனக் கைம்மாறில்லாமை பகர்மாறன்
பாடனை வார்க்கு முண்டாம் இன்பம்"

ஒத்தெல்லோ

[Shakespeare's —"Othello"]

அங்கம் 2. களம் 3.

[361-வது பக்கத் தொடர்ச்சி]

காஸ்ஸியோ:—எனக்கு நற்புத்தியே கூறுகின்றாய் நீ [1].

இயாகோ:—நட்பின், கரவற்ற அன்பின், உண்மையில் உறுதியா யிது உரைக்கின்றேன். [2]

காஸ்:—உண்மையாகவே யானும் உணர்கின்றேன் [3]. தாமதமின்றிக் காலையில், என்பொருட்டு மேற்கொள்ளும்படி, புண்ணியவதி டெஸ்டிமோனாவை வேண்டுவேன் [4]. இங்கு இடைதடுக்குமானால் எனது அதிர்ஷ்டத்தில் முற்றிலும் நம்பிக்கையற்றவனாகின்றேன் நான். [5]

இயா:—நீ இருப்பது நேரிதே [6]. நல்லிரவு உனக்கு அடுத்த அதிகாரியே; காவலுக்கு நான் செல்லவேண்டும்.

காஸ்:—நல்லிரவு, மெய்ம்மை இயாகோ. [7]

(போகிறான்)

இயா:—எனின், அயோக்கியனாக நான் ஆடுகின்றேன் என்பான் எவன்? நான் தருகின்ற இந்தப் புத்திமதி இலவசமாகவும் உண்மையாகவும் எண்ணுவதற்கு ஏற்புடைத்தாகவும், மெய்யே, மூரனை மீண்டும் வசப்படுத்தும் வழியாகவும் இருக்குங்கால் [8]? ஏனெனில், உண்மையான வேண்டுகோள் எதனினும் தாழ்கின்ற டெஸ்டிமோனாவை இணக்கிவிடுதல் மிக எளிது [9]. பிறகு, மூரனை அவள் தன்வசமாக்குவதோ [10]: தன் ஞானஸ்நானத்தையும், பாபவிமோசனத்தின் எல்லா முத்திரை அறிகுறிகளையும் துறப்பதேயாயினும் [11], அவனது நொய்யசெய்கையுடன் அவளது வேட்கை கடவுளென விளையாடும் வண்ணமே, அவள் ஆக்கலாம் அழிக்கலாம் விரும்பியதைச் செய்யலாம்வகை அவனுடைய ஆன்மா அவள் காதலுடன் தளையுண்டிருக்கின்றது [12]. ஆயின், அவனுடைய நன்மைக்கு நேராக ஒருங்கு செல்லும் இவ்வழியைக் காஸ்ஸியோவிற்கு எடுத்துரைக்க, எவ்வகையில் யானொரு அயோக்கியனாவேன் [13]? நரகத்தின் அதிதேவதையே [14]! பேய்கள் தம்முடைய மிகக்கரிய பாவங்களைத் தூண்டும்போது, முதலில் அவை, நான் இப்பொழுது செய்வதேபோல், மோக்ஷத்தின் காட்சிகளைக் கொண்டே குறிப்புணர்த்தி வசியஞ் செய்கின்றன [15]. வஞ்சனையற்ற இந்த முழுமூடன் தன் பதவியைப் பழுதுதீர்த்துக்கொள்ளுமாறு டெஸ்டிமோனாவை விடாமற் றொடர்ந்து திரிய, அவள் அவன்பொருட்டு மூரனிடம் வலிதாகப் பரிந்துபேசி வற்புறுத்துவதற்கிடையே, அவனது செவிகளில் நான் இந்தக் கொள்ளைநோயைக் கொட்டுவேன் [16]—தன் மெய்யுறுகாமத்திற்காக அவனுக்கிட்ட உத்தரவை விலக்குகின்றாள் இவள் [17]. இதனால், அவனுக்கு அவள் நன்மைசெய்ய எத்துணைக்கெத்துணை வருந்தி முயல்கின்றாளோ அத்துணைக்கத்துணை அவள் மூரன்பால் தன் நன்மதிப்பை அழித்துக்கொண்டவளாவாள். இப்படியே நான் இவளது சீலத்தைந் தாராகத் திரித்து [18], அவர்களனைவரையும் சிக்கவைக்குமொரு வலையை அவளுடைய நல்லியற்கையினின்றே பின்னிவிடுவேன்.

(1) டெஸ்டிமோனாவின் உதவியைக் கொண்டு, ஒத்தெல்லோவின் அன்பை மீண்டும் பெறுவதற்கு முயலும்படி இயாகோ கூறிய உபாயம் தக்கதேஎன்று காஸ்ஸியோ ஒவ்வுகின்றான்.

(2) உன்னோடு எனக்குள்ள நட்பினாலும், உன்னிடத்தில் வஞ்சனையின்றி நான் வைத்துள்ள அன்பினாலும், நான் உனக்குச் சொல்லியது, உண்மையாக மனப்பூர்வமாய்ச் சொல்லிய நற்புத்தியே என்று உறுதியாகக் கூறுகின்றேன்—என்பது பொருள்.

(3) நீ உண்மையாகவே கூறினாய் என நான் உணர்ந்து கொள்கின்றேன்—என்பது பொருள்.

(4) என்பொருட்டு மேற்கொள்ளும்படி—என்பொருட்டு ஒத்தெல்லோவினிடம் பரிந்துபேசுங் கருமத்தை மேற்கொள்ளும்படி—என்பது பொருள்.

(5) டெஸ்டிமோனா என்பொருட்டுப் பரிந்துபேச மறுத்தாலும், அல்லது அவள் பேசியும் ஒத்தெல்லோ இணங்காவிட்டாலும் அதன் பிறகு எனக்கு எள்ளளவேனும் நல்லதிர்ஷ்டமில்லையென்று நான் கையற்று நின்றுவிட்டவனாவேன்—என்பது பொருள்.

(6) நீ இப்படி எண்ணியிருப்பது நேரிதே—என்பது பொருள்.

(7) நல்லிரவு, என்பது ஆங்கில மரபின்படி கூறும் பிரிவு வந்தனம்.

(8) இந்தப் புத்திமதி......இருக்குங்கால், அயோக்கியனாக நான் ஆடுகின்றேன் என்பான் எவன்?—என இரண்டு வாக்கியங்களையும் ஒரு வினாவாகச் சேர்த்து முடித்துக் கொள்க.

(9) இயற்கையாகவே உபகார எண்ணமுடைய டெஸ்டிமோனாவை, உண்மையான எந்த வேண்டுகோளிற்கும் இணங்கும்படி சுலபமாகச் செய்துவிடலாம்—என்பது பொருள்.

(10) ஆக்குவதோ மிகச்சுலபம்—என்று சேர்த்து இவ்வாக்கியத்தை முடித்துக்கொள்ள வேண்டும்.

(11) கிறிஸ்தவமதக்கோட்பாட்டின்படி இயேசுகிறிஸ்துநாதரின் பேரால் ஞானஸ்நானம் பெற்றுத் தான் கிறிஸ்தவன் என்பதற்கு அடையாளமாகச் சிலுவை முதலிய குறிகளை அணிந்திருப்பவன், பிறவியோடு தொடர்ந்து வரும் மூலமான பாவத்தினின்று விமோசனம் அடைந்தவனாகின்றான், என்று கருதப்படுகின்றது. இவைகளைத் துறந்துவிடும்படி டெஸ்டிமோனா கேட்டாலும் ஒத்தெல்லோ மறுக்கமாட்டான்—என்பது பொருள். துறப்பதேயாயினும் டெஸ்டிமோனாவின் பொருட்டு ஒத்தெல்லோ இணங்குவான்—என்று சேர்த்துக்கொள்க. இயாகோ தனக்குள் பேசிக்கொள்கின்றானாகையாலும், தன் தீய எண்ணம் கைகூடிவருகின்றதென்னும் களிப்பின் மிகுதியாலும், அவன் பேசும் வாக்கியங்கள் பல முடியாமல் இடையிடையே நின்றுவிடுகின்றன.

(12) ஒத்தெல்லோ, டெஸ்டிமோனாவினிடத்தில் வைத்திருக்குங் காதலால் கட்டுண்டிருக்கின்றான். ஆதலால் அவள் விருப்பத்திற்கு விரோதமாகச் செய்யும் ஆற்றல் இல்லா எளியனாகி, அவள் வேட்கை எதனை விதிக்கின்றதோ அதனைக் கடவுளிட்ட சட்டமாகக் கொண்டு ஒழுகுகின்றான்—என்பது பொருள்.

(13) நான் சொல்லிய வழியின் நேர்மையை நோக்குங்கால், அயோக்கியனென்று என்னை எவராலும் இகழஇயலாது—என்பது பொருள்.

(14) எல்லாவற்றிற்கும் ஒரு அதிதேவதை இருப்பது போல நரகத்திற்கும் ஒரு அதிதேவதை அமைத்து அதனை அழைத்துத் தான் புரியும் பொல்லாங்கைக் கூறுகின்றான்.

(15) தீயோர் தம் தீமைகளை நடத்திவைக்கத் தலைப்படும்போது முதலில், அது உத்தமமான தெய்வீகக் காட்சிபோல் தோன்றும்படியே மாயங்கள் செய்வார்கள்—என்பது பொருள்.

[ராடரிகோ மீண்டும் வருகின்ருன்]

இயா:—என்ன இப்பொழுது, ராடரிகோ?

ராடரிகோ:—வேட்டையாடும் ஒரு சுணங்கனைப் போலல்லாமல், கூக்குரலை நிறைக்கின்ற வொன்றேஎன்ன இங்கு யான் இவ்வேட்டையில் தொடர்கின்றேன் [19]. என் பொருளெல்லாம் பெரும்பாலும் செலவாகிவிட்டது. இவ்விரவு நான் மிகமிக நன்ருகத் தடியடி அடிக்கப்பெற்றேன்; இதன் முடிவு, எனது வருத்தத்திற்கு வேண்டிய அளவு அனுபவம் அடைந்தவனுவதேயாம் என்று எண்ணுகின்றேன். ஆதலின், பணமோ யாதுமின்றி, அறிவுதான் சிறிது அதிகமாக வெனிஸ்ஸிற்கு மீள்வேன். [20]

இயாகோ:—பொறுமை இல்லாதவர்தாம் எத்துணை யெளிய ஏழைகள்! படிப்படியாக அல்லாது எந்தப் புண்தான் எப்பொழுதுதான் ஆறியிருக்கின்றது? நாம் இயற்றுவது மதியினுலன்றி மந்திரத்தினுலன்றென்பதை நீ அறிவாய் [21]. மதியோவென்னின் தாமதகுணமுடைய காலத்தைப் பொருந்தியிருக்கிறது [22]. நன்ருக நடக்கவில்லையோ இது? [23] காஸ்ஸியோ உன்னை அடித்தான்; அச்சிறு புண்ணினுல் நீ அவனை வேலையைவிட்டு நீக்கிவிட்டாய் [24]. கதிரவனுக் கெதிர் ஏனைய சில நன்கு வளர்கின்றனவானுலும் முதலில் அரும்புகின்ற காய்கள் முதலில் பழுத்துவிடும் [25]. சிறிதுபோ துன்னைத் திருப்தியுடன் அமர்த்திக்கொள். ஜபத்தின்மேலாணை, பொழுது புலர்ந்துவிட்டது [26]. களியாட்டமும் காரியமும் நாழிகையை மிகக் குறியதாகக் காட்டுகின்றன [27]. இவ்விடம் விட்டுச் செல்; உனக்கு நியமித்திருக்கின்ற இடத்திற்குப் போ. சொல்கிறேன், போ; இனி உனக்கு அதிகம் தெரியவரும் [28]. வேண்டா, நீ போய்விடு. [29]

[ராடரிகோ போகின்ருன்]

இயா:—இரண்டு காரியங்கள் செய்தல் வேண்டும். காஸ்ஸியோவின் பொருட்டு என்மனைவி தன்தலைவியிடம்பரிந்துபேசவேண்டும். அவளைத் தூண்டுவேன். அதற்கிடையில் நானே மூரனைத் தனியே யழைத்து, காஸ்ஸியோ அவன்மனைவியை மன்ருடிக்கொண்டிருக்கும்போது நேராகக் கொணர்ந்து சேர்ப்பேன்—ஆம், அதுதான் வழி; குளிர்ச்சியாலும் தாமதத்தாலும் சூழ்ச்சியை மழுக்கிவிடலாகாது [30].

(16) முழுமூடன் - காஸ்ஸியோ. பதவியைப் பழுதுதீர்த்தல் - தான் இழந்த உத்தியோகத்தை மீண்டும் பெறுதல். அவனது செவிகளில் - ஒத்தெல்லோவின் செவிகளில். கொள்ளைநோயைக் கொட்டுவேன் - கொடிய தீமையைப் புகட்டுவேன்.

(17) ஒத்தெல்லோவின் காதில் இயாகோ கொட்ட நினைத்த கொள்ளைநோய் இது. காஸ்ஸியோவினிடத்தில் காமங்கொண்டிருக்கின்ருளாதலால் அவன் தன்னுடனேயிருக்கும்படி, இவ்வுத்தரவை மாற்றமுயல்கின்ருளல்லாமல் காரணம் வேறில்லை என்று காட்டுவேன்—என்பது பொருள்.

(18) தார் - என்பது (Pitch) தொட்டாரை ஒட்டிக்கொண்டு அழுக்காக்குமாதலால், இழிவுடைய பொருளாகக் கருதப்படுவது.

(19) இந்தக் காரியத்தில் நான் ஒரு கருவியாக உபயோகப்படுத்தப் படுகின்றேனே யொழிய இதனுல் எனக்கொன்றும் இலாபம் இல்லை - என்பது பொருள். சுணங்கன் - நாய்.

(20) உன்னைப்போன்ற நயவஞ்சகர்களை நம்பலாகாது என்னும் அனுபவந் தவிர நான் இக்காரியத்தில்அடைந்த இலாபம் வேறு இல்லை. இவ்வனுபவத்தை மிக்க பொருட்செலவு செய்தும் துன்பத்திற்குள்ளாகியும் பெறவேண்டியிருந்தது—என்பது பொருள்.

(21) மந்திரத்தால் செய்வதானுற்ருன் நினைத்தவுடனெக்காரியம் முடிந்துவிடும். நாமோ யுக்தியினுல் சாதிக்க முயல்கின்ருேம். ஆகையால், மெல்லமெல்லத்தான் முடியும் என்பதை அறியாயோ நீ—என்பது பொருள்.

(22) யுக்தியால் சாதிக்கவேண்டியவர்கள், காலதாமதமானுலும் காத்துக்கொண்டுதான் இருக்கவேண்டும்—என்பது பொருள்.

(23) நம்முடைய காரியம் நிறைவேறும்படி நடைபெறவில்லை யென்ரு கூறுகின்ருய். எல்லாம் நேராகத்தான் முடிந்துகொண்டு வருகிறதே—என்பது பொருள்.

(24) நீ பட்ட அச்சிறுஅடிதான் காஸ்ஸியோவேலையை இழக்கக் காரணமாயிருந்தது.

(25) ஒத்தெல்லோவும் டெஸ்டிமோனுவும் கொண்ட காதல் மிகவிரைவில் அரும்பியதாதலால் மிகவிரைவில் பழுத்து அழுகி உதிர்ந்தும் விடும்—என்பது பொருள்.

(26) ஜபத்தின் மேல் ஆணை—என்றுகூறி வற்புறுத்துவது ஆங்கில மரபு.

(27) களியாட்டமும் காரியமுமாக இருந்தபடியால் நாழிகை கழிந்தது தெரியவில்லை—என்பது பொருள்.

(28) வர வர, விஷயங்களெல்லாம் உனக்கு நன்ருகப் புலப்படும்—என்பது பொருள்.

(29) மேலும் மேலும் இயாகோவை இடித்துரைக்கும் எண்ணமுடன் ராடரிகோ அவ்விடம் விட்டகல விரும்பவில்லையாயினும் இயாகோ அவனை வற்புறுத்தி அனுப்பிவிடுகின்ருன்.

(30) காரியத்தை ஆறவிடாமல் விரைவாகச் செய்து முடிக்கவேண்டும்—என்பது பொருள்.

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

கலித்தொகை

[383-வது பக்கத் தொடர்ச்சி]

மருதக்கலி 6

பரத்தையர் சேரியிலிருந்து தலைவன் வந்தனன் என அறிந்த காமக்கிழத்தி தன் காதல்மிகுதி கூறி ஊடினுள். அதனை உணர்ந்து அவன் அவளைச் சார்ந்துநின்ருன். அவனைக் கண்டு ஊடல் தீர்கின்றவளாய் அவள் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுட்
டுனிசிறந் திழிதருங் கண்ணினீ ரறல்வார
வினிதமர் காதல னிறைஞ்சித்தன் னடிசேர்பு
நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போலப்
பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉந் தண்டுறை நல்லூர

ஒருநீ பிறரில்லை யவன்பெண்டி ரெனவுரைத்துத்
தேரொடுந் தேற்றிய பாகன்வந் தீயான்கொ [தபுண்
லோரிற்ருன் கொணர்ந்துய்த்தார் புலவியுட் பொறித்
பாரித்துப் புணர்ந்தநின் பரத்தைமை காணிய

மடுத்தவன் புகுவழி மறையேனென் றியாமொடு
மெடுத்துச்சூள் பலவுற்ற பாணன்வந் தீயான்கொ
[தின்க
லடுத்துத்தன் பொய்யுண்டார்ப் புணர்ந்தநின் னெருத்

ணெடுத்துக்கொள் வதுபோலுந் தொடிவடுக் காணிய
தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தீயான்கொல்
கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி
யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய

என்றுநின்

தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்
யார்நீ வருநாட்போ லமைகுவம்யாம் புக்கீமோ
மாரிக் கவாவுற்றுப் பீள்வாடு நெல்லிற்காங்
காராத் துவலை யுளித்தது போலுநீ
யோர்யாட் டொருகால் வரவு.

தரவு.

(வரி 1-8) விரி கதிர் - விரிகின்ற கிரணங்களையுடைய, மண்டிலம்-சூரியன், வியல் விசும்பு - பரந்த ஆகாயத்தில், ஊர்தர-செல்ல, புரி தலை - முறுக்குக்கொண்ட தலைகள், தளை அவிழ்ந்த - கட்டுவிட்ட, பூ அம் கண் - பூக்களாகிய அழகிய இடத்து, புணர்ந்து-கூடி, ஆடி-அவைகளிலுள்ள தேனை அனுபவித்து, வரிவண்டு - பாட்டினையுடைய வண்டுகள், வாய்சூழும் - அவ்விடத்தே சூழ்ந்துகொண்டிருக்கும், வளம் கெழு பொய்கையுள் - வளப்பம் பொருந்திய பொய்கையுள், துனி சிறந்து - ஊடல் மிகுந்து, இழி தரும் கண்ணின் நீர்-சிந்தும் கண்ணீர், அறல் வார-அலைகள் போல் ஒழுக, இனிது அமர் காதலன் - (அவ்வருத்தத்தை யுணர்ந்து) இனிதாக வந்து தங்கிய காதலன், இறைஞ்சி தன் அடி சேர்பு - வணங்கித் தன் அடியை அடைந்து, நனி விரைந்து அளித்தலின் - மிகவும் விரைந்து அருள் செய்தலால், நகுபவள் முகம்போல - சிரிப்பவள் முகம்போல, பனி ஒரு திறம் வார - பனியானது ஒரு பக்கத்தில் ஒழுக, பாசு அடை தாமரை - பசுமையையுடைய இலைகளையுடைய தாமரையின், தனிமலர் - தனித்த மலர், தளை விடூஉம் - மலர்கின்ற, தண் துறை நல் ஊர - குளிர்ச்சிபொருந்திய துறையினையுடைய நல்ல ஊருக்குத் தலைவனே.

தாழிசை

(வரி 9-12) ஒரு நீ (நான் கூறுவது உண்மை என) நீ அறிந்துகொள், அவன் பெண்டிர் பிறர் இல்லை - அவன் மனைவியர் பிறர் இல்லை, நீ-நீ ஒருத்தியே, என உரைத்து-என்று கூறி, தேரொடும் தேற்றிய பாகன்-தன் தேரைத் தொட்டுச் சத்தியம்செய்த பாகன், ஓர் இல் - ஒரே வீட்டில்,தான் உய்த்தார்-தான் தேரில் கொண்டுவந்து சேர்த்த பலபரத்தையரும், புலவியுள் - ஊடலால், பொறித்த புண் - உண்டாக்கிய புண்கள், பாரித்து - பெரியனவாக, புணர்ந்த-(அவர் ஊடலை அகற்றிப்) புணர்ந்த, நின் பரத்தைமை காணிய-நின் பரத்தைமையைக்காணற்கு, வந்தீயான் கொல் - இங்கு இப்பொழுது வாரானோ!

பரத்தையரோடு கூடும் தன்மை பரத்தைமை.

வந்தீயான் - வினைத்திரிசொல்

கொல் - ஐயம்

(வரி 13-16) மடுத்தவன் - (காமத்தீப்) பற்றிய தலைவன், புகுவழி - சென்ற இடத்தை, மறையேன் - உனக்கு மறைக்கமாட்டேன், என்று யாழொடும் எடுத்து - பலவற்றின் மேலன்றித் தன் யாழையும் எந்தி அதன்மேலும், சூள்பல உற்ற பாணன் - சத்தியம் பல செய்த பாணன், அடுத்து - அடிக்கடி, தன்பொய் உண்டார் - தன்பொய்யை உணர்ந்த பரத்தையரை, புணர்ந்த - கூடிய, நின் எருத்தின் கண் - நினது பிடரியிலே, எடுத்துக் கொள்வது போலும் - கையாலே எடுத்துக்கொள்ளக்கூடியது போன்ற, தொடி வடு காணிய - தொடியின் தழும்பைக் காணுதற்கு, வந்தீயான் கொல் - இங்கு இப்பொழுது வாரானோ!

வந்தீயான் - வினைத்திரிசொல்

கொல் - ஐயம்

(வரி 17-20) தணந்தனை என கேட்டு - எம்மை நீ விட்டு நீங்கினை என யாம் சொல்லக்கேட்டும், தவறு ஓராது - தான் உனது குற்றத்தை உணராமல், எமக்கு நின் குணங்களை பாராட்டும் தோழன் - எமக்கு நினது குணங்களைப்புகழ்ந்து கூறும் உன் நண்பன், கணம்குழை-திரட்சியையுடைய குழை என்னும் காதணிகளையுடைய, நல்லவர் - பரத்தையருடைய, அறல் கதுப்பு அணை - அறல் போன்ற கூந்தலாகிய அணையிலே, துஞ்சி-தூங்கி, அணங்குபோல் - தெய்வம்போல், கமழும்-மணக்கும், நின் அலர்மார்பு-நினது பரந்த மார்பை, காணிய-காணுதற்கு, வந்தீயான் கொல் - இங்கு இப்பொழுது வாரானோ!

வந்தீயான் - வினைத்திரிசொல்

கொல் - ஐயம்

அறல் - அலையினால் அலைக்கப் பெற்றுப் படிப்படியாக அமைந்து நிற்கும் நுண்கரு மணலின் கிடக்கை.

தனிச் சொல்

என்று நின் - என்று நினது

சுரிதகம்

(வரி 22 26) தீரா முயக்கம் - அன்பு நீங்காத முயக்கத்தை, பெறுநர் - பெறுகின்ற பரத்தையரை, புலப்பவர் யார்-யார் வெறுப்பர், யாம்-யாங்கள், நீ வருநாள்போல் அமைகுவம் - (நீ வாராநாளிலும்) நீ வருகின்ற நாட்களில் அமையுமாறு போல அமைவோம், புக்கீமோ - (பரத்தையர் மனைக்குச்) செல்லுவாயாக, நீ ஓர் யாட்டு ஒரு கால் வரவு-நீ ஓர் ஆண்டுக்கு ஒருதரம் (வருகின்ற) வரவு, மாரிக்கு அவா உற்று - மழைக்கு ஆசைப்பட்டு, பீள் வாடும் நெல்லிற்கு-இளங் கதிர் வாடும் நெல்லிற்கு, ஆங்கு - அப்பருவத்தில், ஆரா துவலை - நிறைதலில்லாத துளியை, அளித்தது போலும் - அம்மழை அளித்த தன்மையைப் போல மிக்க வருத்தத்தைத் தரும்.

சூரியன்

[380-வது பக்கத் தொடர்ச்சி]

VIII. பகல் நக்ஷத்திரம்

நக்ஷத்திர தராதரம்:—நக்ஷத்திரங்களின் ஒளித் தோற்றத்திற்கேற்பப் பல தரங்களாக இவற்றைப் பிரித்துள்ளார்கள். முதல்தர நக்ஷத்திரம், இரண்டாந்தர நக்ஷத்திரம், மூன்றாந்தர நக்ஷத்திரம், நான்காந்தர நக்ஷத்திரம், ஐந்தாந்தர நக்ஷத்திரம், ஆறாந்தர நக்ஷத்திரம் என்ற இவைகள்மட்டுந்தான் நமது ஊனக் கண்ணுக்குத் தோன்றும். இவற்றினும் குறைந்தஒளியுள்ள ஏழாந்தர நக்ஷத்திரங்கள் முதலாயின நம்கண்ணுக்குஅவ்வாறு தோன்றா. சூரியனுடையஎடையில், ஏழில் ஒரு பங்கேனும் உள்ள பொருள் தான், கண்ணுக்குத்தோன்றும். அதற்கும் குறைந்த அளவுள்ளவற்றிற்கு, பிரகாசத்தைத் தரப் போதிய உஷ்ணம்

இருப்பதில்லை. 101 அங்குல தூரதிருஷ்டி வழியாக 319,000,000 நக்ஷத்திரங்களைக் கண்டுள்ளார்கள். ஒன்றாந்தர நக்ஷத்திரத்தின் ஒளி, இரண்டரை இரண்டாந்தர நக்ஷத்திர ஒளியோடு சமாமம்; ஆறு மூன்றாந்தர நக்ஷத்திர ஒளியோடு சமமாம்; பதினாறு நான்காந்தர நக்ஷத்திர ஒளியோடு சமாமம்; நாற்பது ஐந்தாந்தர நக்ஷத்திர ஒளியோடு சமாமம்; நூறு ஆறாந்தர நக்ஷத்திர ஒளியோடு சமமாம்.

இரட்டை நக்ஷத்திரம் (Double Stars):-மற்றும், நாம் இரவில் ஆகாயத்தை உற்று நோக்கும்போது, சில நக்ஷத்திரங்கள் ஒன்றாகத் தோன்றுபவை, தூரதிருஷ்டி வழியே காணும்போது, இரட்டை நக்ஷத்திரங்களாக விளங்குகின்றன (Double Stars). புனர்பூசத்தில் ஒன்றும், சப்தரிஷி மண்டலத்திலே அருந்ததிஒன்றும், யாவரும் அறிந்தவை; எளிதிலே இவற்றைக் கண்டறியலாம்.

ஒளிமாறும் நக்ஷத்திரம்:—சிலநக்ஷத்திரங்கள், சிலகாலம் ஒளி பெருத்தும், சிலகாலம் ஒளி சிறுத்தும், தோன்றுகின்றன. இவற்றை ஒளிமாறு தாரகைகள் (Variable Stars) எனக் ககோள சாஸ்திரிகள் கூறுகின்றனர். இவை இரண்டு வகை. நீண்டகாலம் ஒளி மாற்றத் தாரகைகள் என்றும், குறுகிய கால ஒளி மாற்றத் தாரகைகள் என்றும் இவற்றை வழங்குகின்றனர். 150 நாள் முதல் 450 நாட்கள் வரை மாறுவன முதலினத்தைச் சேர்ந்தவை; 50 நாட்களுக்கு மேற்படாமல், பெரும்பான்மையும் பத்து நாட்களுக்குள்ளேயே மாறுவன இரண்டாம் இனத்தைச் சேர்ந்தவை. சூரியப்புள்ளி குறிப்பிட்ட காலத்தே தோன்றுவதுபோல,நீண்டகாலஒளிமாற்ற தாரகைகளில், திடீர் என ஜ்வாலைகள் குறிப்பிட்டகாலத்திலே யெழுகின்றன. சூரியப்புள்ளி எழும்போதும், சூரியனிலிருந்து பிரகாசம் மிகுதியாகத் தோன்றலாம் என வானசாஸ்திரிகள் கருதுகின்றனர். திமிங்கில மண்டலம் (Cetus) எனத் தெற்கே தோன்றும் நக்ஷத்திரகூட்டத்தில், விசித்திர நக்ஷத்திர (Mira) ஒன்றுள்ளது; ஒளியோடு தோன்றும்போது இரண்டாந்தர நக்ஷத்திரம்போலத் தோன்றுகின்றது. இவ்வாறு பதினைந்து நாட்கள் விளங்கியபின் பத்து வாரத்தில் ஒளி குறைந்துகொண்டே வந்து கண்ணுக்குப் புலனாகாமல் மறைந்துவிடுகின்றது. ஆறு மாதம் கழிந்தவுடன், மறுமுறையும் தோன்றுகின்றது. பூரட்டாதி உத்திரட்டாதி என்ற இவற்றின் அருகேயுள்ள பர்சியஸ் மண்டலத்தைச் சேர்ந்த பேய் நக்ஷத்திரம் (Algol) குறுங்கால ஒளிமாற்றமுடைய தாரகைகளில் ஒன்று. ஈதும், இரண்டாந்தர நக்ஷத்திரம்போல் $2\frac{1}{2}$ நாள் ஒளிர்கின்றது; பின் $4\frac{1}{2}$ மணி நேரம் வரை மங்கலாகி மூன்றில் ஒரு பங்கு ஒளியுடன் மட்டும் தோன்றுகின்றது. 20 நிமிஷம் அவ்வாறே இருந்தபின் மறுபடியும் ஒளிபெருகி $4\frac{1}{2}$ மணி நேரத்தில் முன்போல ஒளிவிடத் தொடங்குகிறது. இதற்கருகே கறுப்பு நக்ஷத்திரம் ஒன்று, மூன்று நாளைக்குள்ளேயே, ஒருமுறை யதனைச் சுற்றிவருகின்றது. அவ்வாறு சுற்றிவரும்போது, இதன் ஒளி, இவ்வாறு மாறுகின்றது. குறுகிய கால ஒளி மாற்றம், இவ்வாறு கறுப்பு நக்ஷத்திரங்கள் இடையே வருவதால்தான், நிகழ்கிறதாம். வாயு நிலையில் உள்ள நக்ஷத்திரங்கள், சுற்றி வருகின்றபோது, சிலபோது, இடை சிறுத்து இருபுறமும் இரு பந்துகள்போலப் பெருத்துத் தோன்றுகின்றனவாம். இன்னவாறே சுற்றிவருகையில்,இருபுறத்தும் இருபந்துகள்போன்றுள்ளவை, தனித்தனியே பிரிந்துபோகலாம். அப்போது இரட்டை நக்ஷத்திரங்கள் தோன்றுகின்றன. இவ்விரட்டை நக்ஷத்திரங்கள் சில, கறுப்பு நக்ஷத்திரங்களாய்விடின், ஒளிமாறுந் தாரகைகளுந் தோன்றுகின்றனவாம்.

நிலையான நக்ஷத்திரங்கள் (Fixed Stars):-நக்ஷத்திரங்கள், இரவில் நமது கண்ணுக்கு உதிப்பன போலவும், அஸ்தமிப்பனபோலவும், தோன்றுகின்றனவன்றோ? ஆயினும், ஒரு நக்ஷத்திரம் மாத்திரம் உதிப்பதுமில்லை; அஸ்தமிப்பதுமில்லை; நின்ற நிலையிலேயே நின்று மற்றைய நக்ஷத்திரங்களை யெல்லாம், தன் கையில் பிடிக்கும் காற்றாடிகளைப்போலச் சுழற்றுகின்றது: 'நாணிரைத்தநேக தாரகா கணமாம் நவமணியுட னவ்விதங் கொள்கோணிரைத் தீரேழ் புவனமும் வலஞ்செய்விக்கும் கொற்றமுடைய' துருவனே, இந்த நக்ஷத்திரமாம் (Pole Star). திருமால் அருளால், ஓர் அரசகுமாரன், என்று மழியாத இப்பதவியைப் பெற்றான் என்பது, புராணக் கூற்று; சப்தரிஷிகள் என்ற ஏழுநக்ஷத்திரங்களில், முதல் இரண்டிற்கும் நேரே கீழே, வடதிசையின் நடுவே யுள்ளது. இதன் நிலை, நமக்கு வடதிக்காகும். ஒரு காந்த ஊசியை, மற்றோர் ஊசியின் முனையில் சுழலவிடுவோமாயின், அது, துருவத்தையே சுட்டி நிற்கும். திக்குகளைப் பகுத்தறிய, முன்னாளில் மாலுமிகளுக்கு இந்த நக்ஷத்திரமே மிகவும் பயன்பட்டது. இந்நக்ஷத்திரந்தான் அசையாது ஆகாயத்தில் ஒரே இடத்தில் என்றும் காணப்படுவதாம்.ஏனைய நக்ஷத்திரங்களும் ஓடுவனபோலக் காணப்பட்டாலும், அவையும், நிலை மாறாதனவேயாம். பூமியின் ஓட்டத்தால் அவை ஓடுகின்றனபோலத் தெரிகின்றன. சப்தரிஷிகளில் (Great Bear) ஒருவருக்கொருவர் உள்ள தூரம் என்றும் மாறுவதில்லை; திருச்சங்குவின் (Southern Cross) திருவுருவமும், சற்றும் கலைவதில்லை. வசிஷ்டருக்கும் அருந்ததிக்குமுள்ள தூரம், என்றும் ஒரே தன்மையதாம். அசுவனி முதல், இரேவதி ஈறாக உள்ள 27 நக்ஷத்திரங்களுள், ஒவ்வொன்றின் உருவ அமைப்பும், பல்லாயிர வருடங்களாயபோதும் மாறுதலின்றியே தோன்றிவருகின்றன.

நக்ஷத்திரக் கூட்டம்:-மனிதர், சங்கங்களாக,ஆங்காங்கு அமைந்து வாழ்வதுபோல,நக்ஷத்திரங்களும், பல கூட்டங்களாக அமைந்து விளங்கி நிற்றலால், ஒவ்வொரு கூட்டமும் ஒவ்வொரு பெயரைப் பெறுகின்றது. அசுவனி முதல் இரேவதி ஈறாக உள்ள 27 நக்ஷத்திரக்கூட்டங்களில், பெரும்பாலும்,பல நக்ஷத்திரத் தொகுதிகளைக்காணலாம். விசாகம் ஆறு நக்ஷத்திரம்; கேட்டை நான்கு நக்ஷத்திரம்; திருவாதிரை மாத்திரம் ஒரு நக்ஷத்திரமே. இவ்விருபத்தேழு நக்ஷத்திரங்களும், சூரியனைச் சுற்றி ஒரு நீளவட்டத்தில்

அமைந்துள்ளன போலத் தோன்றுகின்றன. இவ்வமைப்பையே, மேடம் முதல் மீனம் ஈறாகப் பன்னிரண்டு இராசிகளாக, நமது பூகோள சாஸ்திரிகள் கொண்டனர். எனவே, இப்பன்னிரண்டு இராசிகளுக்கு 27 நக்ஷத்திரம் எனில், ஒரு இராசிக்கு 2¼ நக்ஷத்திரங்களாகின்றன. ஒவ்வொரு நக்ஷத்திரத்துடனும் சூரியன் சற்றேறக்குறைய 13½ நாள் வசித்து வருகிறான். திருவாதிரை (Betelgeuse) ஞாயிறுடனே சேரும்போது கோடை மழை தப்பாது பெய்வதால் நமக்கு மிளகு பயிராகின்றது. இவ்வாறே ஒவ்வொரு நக்ஷத்திரங்களிலும் சூரியன் செல்லும் காலங்களுக்கும், வெவ்வேறு பலன் உண்டு என்பர் முன்னோர். இந்தச் சூரிய இராசியில் உள்ள 27 நக்ஷத்திரங்களின் வடிவங்களைக் கீழ்க்கண்டவாறு பழம் பாடல் ஒன்று விளக்குகின்றது. வானத்தின் நடுவே இவை வரும்போது, உச்சநிலை பெறுகின்றன என்று வானசாஸ்திரிகள் கூறுவர். அவ்வாறு, ஒவ்வொரு நக்ஷத்திரமும் உச்சமாம்போது, எந்த இராசி உதையமாகியுள்ளது; அந்த ராசி உதயமாகி எத்தனை நாழிகை ஆயின; என்பவற்றையும் இவ்வகவல் விளக்குகின்றது. 27 நக்ஷத்திரங்கள் :—

அச்சுவினி அறுமீன், குதிரைத் தலைபோல்,
மெச்சிடு கடகத் திருகடி கையதாம்.
பரணி மும்மீன், அடுப்புப் போல,
திரண்மிகு கடகத் தொருநாற் காலாம்.
கார்த்திகை யறுமீன், எற்றறி யேகம்.
உரோகணி, ஊற்றல் பன்னிரு மீனும்;
முரண்மிகு சிம்மம் மூன்றே காலாம்.
மான்றலை மூன்றும், தேங்காய்க் கண்போல்,
ஆன்ற சிங்கத் தைந்தே காலே.
ஆதிரை ஒருமணி; ஆயிழை ஒன்றரை.
ஓதறு புனர்மீன்; ஓடங் கோலரை.
பூசம், புடலம் பூவது போல,
வீசுங் கோலில் இரண்டரை யாகும்.
ஆயிலியம் நான்கும் அம்மி போல,
மாயிறு கோலில் நாலே காலே.
மகமொரு நான்கும்; முடநுகம் போல,
நகருந் தேளில் ஒன்றரை யாகும்.
பூரம், உத்திரம், பொற்காற் கட்டில்;
ஊர்தேள் மூன்றே; ஒண்சிலை யரையே.
அத்தம், ஐம்மீன் கைத்தலம் போல,
முத்தீன் தனுவின் மூன்றெனப் படுமே.
சித்திரை, இருமீன் சிறுபுலிக் கண்போல்,
அத்தனு வதனில் ஐந்தெனப் படுமே.
சோதி துலக்கத் தொருமணி யென்ப;
சாதி மகரத் தொன்றரை சாற்றும்.
விசாக மாறும்; இடிபாழ்ங் குறவாம்;
வசையறு மகரத் தாகுநாற் கடிகை.
அனுஷ மாறும், முடப்பனை போல,
குனியும் கும்பத் தரையா கும்மே.
கேட்டை நான்கும் ஈட்டி போல,
ஒட்டைக் குடத்தில் ஒன்றரை யாகும்.
மூல மாறும், எக்காளம் போலச்
சாலும் குடத்திற் சதுர மாமே.
பூராடம், உத்திராடம், பூங்கால் நாலாம்;
சீரா மீனத் தோரரை நான்கே.
ஓணம் மூன்றும் உழக்கோல் போலக்
காணும் ஆட்டில் மூன்றெனப் படுமே.
அவிட்டச் சக்கரத் தாறும்; ஏறரை.
தவிட்டுச் சதயந் தனியே றிரண்டரை.
பூரட் டாதியும், உத்திரட் டாதியும்,
ஓரா மிதுனத் தொன்றரை, நான்கே.
ரேவதி மொய்ம்மீன் தோணிபோல,
ஓவறு கடகத் தொருமுக் காலே.

—வருஷாதி நூல்

இரவில் மணியறிதல்:—இந்த நக்ஷத்திரங்கள் உச்சமாவதைக் கண்டு, இரவில் மணி கூறும் வழியை ஒரு பாட்டு உணர்த்துகின்றது.

சித்திரைக்குப் பூசமுதல்; சீரா வணிக்கனுஷம்;
அத்தனுசுக் குத்திரட் டாதியாம்;— நித்தநித்தம்
ஏதுச்ச மானாலும் இரண்டேகா லிற்பெருக்கி
மாதமைந்து தள்ளி மதி.

சித்திரை முதல் ஆடி வரையும் பூசம் முதலாகவும், ஆவணி முதல் கார்த்திகை வரையும் அனுஷம் முதலாகவும், மார்கழி முதல் பங்குனிவரையில் உத்திரட்டாதி முதலாகவும், எண்ணத்தொடங்கி, நாம் நாழிகை யறியவேண்டியபோது, நம் தலையைத் தூக்கி வடக்குமுகமாக நின்று, வானத்தை நிமிர்ந்து பார்க்கையில், எந்த நக்ஷத்திரம் புருவ மத்தியில் வந்து உச்சமாகின்றதோ, அது நக்ஷத்திரம்வரை எண்ணியபோது, வரும் தொகையை 2¼ல் பெருக்கி, சித்திரையிலிருந்தோ, ஆவணியிலிருந்தோ, மார்கழியிலிருந்தோ, சென்ற மாதங்களையேனும், நாளையேனும் கணக்கிட்டு, மாதத்திற்கு 5 நாழிகையாக அன்றுவரை சுவின்படி, அந்தப் பெருக்கிய தொகையிலிருந்து கழித்துத்தள்ளிக் கண்டது அன்றைய இரவில் சூரியாஸ்தமனத்தின்பின் கழிந்துபோன நாழிகையாம். மணிக்கு இரண்டரை நாழியாகக் கொண்டால், மணியைச் சொல்லிவிடலாம் அன்றோ?

தமிழ் மொழியைக் குறித்த பழய குறிப்புக்கள்

[382-வது பக்கத் தொடர்ச்சி]

9. ஹோ பாண்டியோன் (Ho Pandion), ஹே சோர பாண்டியனோன் (He chora pandianon), காண்டியனோன் - இது பிழையுடையது, என்பவை பாண்டிய அரசனையும் நாட்டுமக்களையும் குறிக்கும் இந்தப் பாண்டியன் என்ற பெயர் வடமொழிச் சார்புடையது. மகாஸ்தனீசைப் பின்பற்றி பிளினீ பண்டேயி (Pandae) என்று எழுதும்முறை வடமொழிக்கு நெருங்கிய உறவுடையதாக இருக்கின்றது. பிளினீயால் அண்மையில் நாட்டில் விசாரித்து எழுதிய செய்திகளும், தாலமி, பெரிபுளூஸில் கண்ட செய்திகளும் திராவிடச் சொல்லின் இயற்கைநிலையைக் காட்டுகின்றன. தமிழில் ஆண்பால் விகுதி அன்

என்பதாகும்; ண், ட் என்பதன் முன் இ என்பது ஒலிமுறையாற் றோன்ற பாண்டியோன் என்றாகும். மேலும் பன்மையில் பாண்டியோனிஸ் என்றுங் காணப்படுவதால் ஆண்பால் ஒருமை பாண்டியன் என்பது தெளிவுறத் தோன்றுகிறது. அந்நாட்டு மக்களுக்கும் அரசனுக்கும் தாலமி அதே பெயரிட்டு எழுதியது சரியான காரியமேயாகும். மக்களைப் பாண்டியர் எனவும், அரசனைப் பாண்டியன், பாண்டிய தேவனெனவும் சொல்லுவர். புராதன (ஹலே) கன்னடத்தில் ஆண்பாலொருமை விகுதி அம்ஆகும். தெலுங்கில் உடு என்பது; ஆகவே தெலுங்கில் பாண்டியுடு என்பது தமிழில் பாண்டியனைக் குறிக்கும். ஆதலினால் தமிழ்ப் பழங்காலமான கிறிஸ்தாப்தத் துவக்கத்தில் தமிழ்மொழியானது மற்றையதிராவிட மொழிகளினின்றும் அதனுடைய வழக்காற்றுநிலை (Idioms) வேறுபாடுடையதாகவே இருந்ததேனும் அன்றுமுதல் இன்றுவரை ஆண்பால் விகுதி ஒரே விதமாகவே இருந்ததென்று அறிகின்றோம். மடுரோ பாஸிலியோன் பாண்டியோனிஸ் (Modura Bazilon Pandionis) என்ற தொடரிலிருந்து பாண்டியர் தாமிரபர்ணிக் கரையிலிருக்கும் கொற்கையிலிருந்த தங்கள் தலைநகரைக் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னரே மதுரைக்கு மாற்றிவிட்டனரென்று அறிகின்றோம். மொடுரா என்பது (பிளினீ-மடுரா Modura) வடமொழிச் சொல்லான மதுராவை குறிக்கும். இதனைத் தமிழ் வழக்குப்படி சொல்லுவர். வட இந்தியாவில் இதேபெயருடையநகரமான மட்ராவை கிரேக்கர் மெதுரா (Methura) என்று எழுதுவர்.

10. ஹோ கேரபோத்ரோஸ் என்று (சேர அரசனைத்) தாலமி கூற, ஹோ கெப்ரோ போத்ரோஸ் என்று பெரிபுளூஸ் கூறும். பின்னதிற் காணப்படும் ப பிழையாக வந்ததென்பது தெளிவு; ஆயினும் ஆசிரியர் தாம் நேரிற்கண்டவற்றைக் கூறியவராகையான் இவ்வாறெழுதியது படியெடுத்தோரின் பிழையாக விருத்தல் வேண்டும். பிளினீயில் கேப்லோ போத்ரோஸ் என்று காணப்படினும், கையெழுத்துப் பிரதிகளில் கேலோ போத்ரோஸ் என்றே காணப்படுகின்றது. வடமொழியில் இந்தப்பெயர் கேரளபுத்ர என வழங்கும். கேர கேள என்பன கேரள என்ற சொல்லின் திராவிடக் குறுக்கமாகும். ஆயினும் அவை மலையாளச் சொற் குறுக்கமே யொழிய தமிழ்ச்சொற் குறுக்கமன்று; கேரளபுத்திரர் அரசாண்ட நாட்டில் இப்பொழுது வழங்குவதும் மலையாள மொழியேயாம்.

11. ஸோரை நோமாடிஸ் [2] (Sorai Nomades) ஆர்க்காடோன் பாஸிலியோன் ஸோரை (Arkaton Basileion Sorai) ஓர்த்தூரா பாஸிலியோன் ஸோர்நாகோஸ் (Orthoura Basileion Sornagos) பரளியா ஸோரேதோன் (Paralia Soreton) பரளியாதோரிங்கோன். இந்தப்பரளியாசோரதோள் என்று கபேரோஸ் முகத்துவாரத்திலிருப்பதாக எழுதப்பட்டிருப்பதால் ஸோரிங்கோனென்றிருக்கவேண்டும். நாட்டின் நிலையைப்பற்றிக் கூறாது ஈண்டு காணப்படும் தொடர்மொழி பலவற்றுள்ளும் காணப்படும் சோர் என்ற சொல்லை ஆராய்வோம். அது தமிழ்நாட்டின் வடக்கிலுள்ள சாதியினரைக் குறிக்குமென்று கூறுவேன். இந்தச்சொல் வடமொழியில் சோல என்றும், ஸோழ தெலுங்கில் சோளஎன்றும் கூறப்படும். இது தமிழில் அல்லது சோழ என்று வழங்கும். இந்நாட்டுச் சனங்களைக் குறித்துத் தாலமி கூறுவதின் பொருத்தம் - அன்றிஅவருக்குச் சொன்னவர்கள் கூறுவதோ-மிக்க சிறப்புடையதாகும். அவர்கள் தமிழில் சோழர், சோழகர், சோழியர், சோழிங்கர் என்று கூறப்படுவர். அவர்கள் நாடும் சோழகம் எனப்படும். தமிழ்ச்சொல்லான சோழ என்பதிலுள்ள ழ என்ற எழுத்து ஒரு வினோதமான உச்சரிப்பையுடையது. அது தெலுங்கில் இல்லாததால் அதற்குப் பிரதியாக ட என்ற எழுத்தைத் தெலுங்கர் உபயோகிப்பர். வடமொழியிலும் பாலியிலும் அவை இல்லாததால் அவர்கள் ட, ள வை உபயோகிக்கின்றனர். கிரேக்கர் இக்காலத்தைப் போல அக்காலத்திலும் ர என்ற எழுத்தை உபயோகித்ததால் தமிழ்மொழியிலுள்ள, ஒரு சிறப்பைக் காட்டுகின்றது. பாண்டிய அரசன் கேரள அரசன் பெயரைச் சொல்வதுபோலச் சோழ அரசன் பெயர் காணப்படவில்லை. அது எவ்விதமாகவிருக்கலாமென்று ஊகிப்பதிலும் பயனில்லை. பழந்தமிழ் நூல்களிலிருந்து சோழரது தலைநகர் உறையூர் என அறிவோமாகலின் பரளியா ஸோரேதோனின் தலைநகராகக் காணப்படும் ஓரத்தூரா † என்பதை உறையூர் எனக் கொள்வது பிழைபடாது.

12. ஆர்காடு பாஸிலியோன் ஸோரா (Arkat-Basileion Sora) இங்குக் குறிக்கப்பட்டுள்ள ஆர்க்காடு என்பது நாடு, மக்கள், நகரைக் குறிக்காது அரசனைக் குறிக்கின்றது. கன்னிங்காம் தளபதி எழுதியதுபோலஇங்குச்சோரஎன்பதுஒருநகராகவும் ஆர்க்காடு என்பது அந்த நகரில் வாழும் ஒரு அரசனைக் குறிபப்தாகவும் கொள்ளவேண்டியிருக்கிறது. தாலமி இவ்வாறு கொண்டனரேனும், நாட்டுமக்கள் கூறினவற்றை இவர் தலைதடுமாறிக் கொண்டனர் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. சோர என்னும் பெயர் அந்த நாட்டு மக்களுக்கு இட்டு வழங்கியதாகும். தாலமியும்இவர்களைச் சோர நோமாடிஸ் (Sorai nomades)-நாடோடிச் சோழர் - என்று கூறுவர். ஆர்க்காடு என்பது இடத்தையும் சொல்லொற்றுமையையும் நோக்குங்கால் மகமதியர்காலத்தில் தலைநகராயிருந்த ஆர்க்காட்டுப் பட்டினம் என்பதில் ஐயமில்லை. சென்னைக்கும் கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் நடுவணுள்ள ஆர்க்காடு உள்ளிட்ட நாடுகள் கிறிஸ்தாப்த காலத்தில்காடுகளாயில்லாது ஆடுமேய்த்துத்

---

† ஓரத்தூரா இதுபொழுது உறையூர் என வழங்கும் ஊரே உறத்தூர் என வழங்கியிருத்தல் வேண்டுமென்று தோற்றுகிறது. இதுவே குறுகி உறந்தையாகியிருத்தல்வேண்டும். தித்தனுறந்தை. (அகம் 22)சோழ ரின்கடுங்கள்ளினுறந்தை(அகம். 137)வளங்கெழுசோழருறந்தை. (குறுந், 116) சேந்தனுறந்தை (குறுக். 258) மற்றும்பல நூல்களிலும் இவ்வாறே வருதல் காண்க.

திரியும் குறும்பர்[1] (Nomads) வசமிருந்ததுஎன்று நாட்டுச் சரிதம் கூறுகின்றது. கன்னிங்காம் தளபதி தற்போதுள்ள ஆர்க்காட்டோடு[2] ஒப்பிடுவதுபிழைபடுமெனக் கருதுகின்றார்; ஆயினும் யூல் சேனதிபதி (Colonel Yule) முகமதிய சரித்திராசிரியரான இபன் படோ (Ibn Batuta) 1340 வாக்கில் இந்த ஊரைக் குறித்துச் சொல்லுவதால் இந்தப் பட்டணம் பழமையுடையுடையதாகும் என்பர். இந்தப் பெயரின் உண்மைநிலை என்னவெனில் ஆற்காட் (Ar-kad)என்ற சொல் தமிழில் ஆறுகாடுகள்எனப் பொருள் படும். அந்த நாட்டில் வாழும் இந்துக்கள் இந்த ஊர் புராணங்களிற் காணப்படாவிடினும் மிக்கப் பழமையுடைய தெனவும், முற்காலத்திலிருந்த ஆறு இருடியர் பர்ணசாலை கட்டிவாழ்ந்தனர் எனவும் கூறுவர். இவர்கள்கூறும் பெயரொற்றுமை உண்மையாயின் தமிழ் மொழியின் தொன்மையும் அதனிற் காணப்படும் மொழிச்சிறப்பியல்பும் விளங்கும்.

13. கரூரா பாஸிலியோன்கேரபோத்ரூ (Karoura baseleion kerobothrou). சேர, கேர, கேரள என்று சொல்லப்படும் சேரநாட்டு அரசரது தலைநகரெனப் பழந்தமிழ்க் கொள்கையாகக் கரூர் கூறப்படுகின்றது. இது சேரநாட்டோடு சேர்ந்த கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள கருவூர்[1] என்று கருதப்படுகின்றது. கரூர் என்னும் சொல் கரிய ஊர் என்று பொருள்படும். தமிழ் நாட்டிலுள்ள கல்வெட்டுக்களில் மிகுதியும் பயின்றுவரும் காழகம்[2] கடாரம்[3] என்ற சொற்கள் குறிக்கும் ஊரும் கரூரின் இலக்கியப் பெயராதல்வேண்டும் என நான் கருதுகிறேன். இங்குக் குறிக்கப்பட்ட பெயர்களின் பொருள் ஒன்றேயாம். தாலமி குறித்த கரூரா என்றசொல் சரியாக அந்த ஊரின் தமிழ்ப் பெயரைக் குறித்துளது கர் (Kar) என்பது கருமையையும், ஊர், ஊரு என்பன நகரின் பெயரையும்குறிப்பனவாம். சென்ற 1800 ஆண்டுகளுள் இப்பெயர்களுள் ஒன்றேனும் மாறுபாடு அடையவில்லை.

1. **குறும்பர்.** இவர்களே அருவர் ஆவர். அருவா, அருவாவடதலை நாடுகள் தொண்டை நாட்டுப் பகுதிகள். ஆர்க்காட்டில் வசித்தவர் அருவராவர் ஆர் - அத்திமரநிறைந்த காட்டில் வாழ்ந்தவர் அருவராகி யிருக்கலாம். ஆர்க்காடு என்பதிலுள்ள இடையினத்தை வல்லினமாக்கி ஷடாரணியப் பெயருமிட்டுப் பிழைப்பட்டனர் பிற்காலத்தார். அழிசி யார்க் காடன்ன-குறுந். (258) ஆர்க்காடுகிழான்(அகம் 64)இதனைக்குறித்துத் திரு.சிவராஜப்பிள்ளை எழுதிய பழந்தமிழர் கால அட்டவணை - The chronology of the Early Tamils அநுபந்தம் IV காண்க.

2. **ஆர்க்காடு** இது மிக மிகப் பழமையான தொரு பட்டணம். அழிசி என்ற தலைவன் ஆண்ட இடம் என்பது பழந் தமிழ் நூல்களால் விளங்குவது.

1. **கரூர்** இதுபொழுது திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சார்ந்தது ஆயினும் இங்கு குறித்த கரூர் இதுவன்று. இது மேலைக்கரையில் பேராற்றங்கரையி லுள்ளது.

2. **காலகம்** இது பர்மா பக்கத்திலுள்ளது.

3. **கடாரம்** இது மலேய தீபகற்பத்திலுள்ளது. இவைகள் கரூருக்கு எவ்வாறு சம்பந்தமுடையதென்று விளங்கவில்லை.

14. மூடோ கலிங்கம் நாமினே (Modo galingam)—பிளினி. இந்தப் பெயரைக் குறித்து முன்னரே கூறியுள்ளேன். மூடோ என்ற தெலுங்குச் சொல் மூன்று என்னும் எண்ணைக் குறிக்குமாயின் இது பழமையான திராவிட பாஷையின் சிறப்பியல்புக்குப் பின்னுமொரு சான்றாக நிற்கிறது. மூடு என்பது தெலுங்கு, மூன்று தமிழ். மூரு கன்னடம் மூஜூ துளுவாகும்.

15. தமரிகே (Damirice), ஸ்கைத்தியா திமிரிக்கே (Scytea Dimirice), பெதியுஞ்சர் அட்டவணை ரவண்ணுபூகோளம் இவைகளின்படி திமிரிகா. இந்தச் சொல்லான திமிரிகேயிலுள்ள திமிர் என்ற பகுதி தமிழ் (Tamil) என்பதைக் குறிப்பதாகப் பர்னல் கருதினர்; அவ்வாறாயின் தமரிகேயிலுள்ள தமிர்என்பது அதற்கு மிகுதியும் ஒற்றுமையுடையதென்று கூறலாம். திமரிக்கே நாட்டிற்கு வடக்கிலுள்ள நாட்டைத் தாலமியும் பெரிபுளூஸ் ஆசிரியரும் ஆரியகம் என்று கூறுவர். சில நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த வராஹமிசிரர் இந்த நாட்டைத் தான் ஆரியகம் என்று கூறினர்போலும். ஆகையால் கிரேக்கர் இட்டழைத்த ஆரியர் திராவிடர் என்ற வகுப்பினரை மலையாளக் கரையில் அவர்கள் இட்டழைத்த நாட்டின் பெயரைக்கொண்டு நாம் அறிந்துகொள்வதோடு இந்த இடங்களில் வாழ்ந்துவந்தவர் ஆரியரும் திராவிடரும் என்றும் நாம் வேறு ஆதாரங்களிலிருந்தும் தெரிந்துகொள்ளுகிறோம்.

16. மலையாளக் கரையிற் காணப்படும் சில பெயர்களைமாத்திரம் குறிப்பிடுவதோடு நிறுத்துகின்றேன். முஸிரிஸ்[1] (Mouziris) முயிரிக்கோட்டையிலுள்ள முயிரியாகும்; திண்டிஸ்[2] (Tyndis)என்பதுதுண்டி; நெல் கிண்டாவிலுள்ள கிண்டா[3]—மேல்கிண்டா, தாலமி—இந்த ஊர் கேரளத்தின் தென்னெல்லையிலுள்ள கன்னேத்திரி (Kannettri) யாகத் தோற்றுகிறது. பிளினியினுடைய கையெழுத்துப் பிரதிகளிலொன்று கிண்டன் என்று கூறாது கனிடன் (Canidon) என்று கூறுகிறது. முஸிரிஸ் என்ற ஊர் டாக்டர் குண்டர்ட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது; மற்றைய இரண்டு ஊரும் பர்னலால் குறிக்கப்பட்டன.

17. கோட்டநரா[4] (Cottonara)—பிளினி; கொட்டநரிகே (Kottonarike)-பெரிபுளூஸ்; இது நல்ல மிளகு உண்டாகும் இடம். தாலமி இந்த நாட்டைக் கூறாதது கவனிக்கத்தக்கது. கொட்டநரா என்பது சில்லாவின் பெயராகக் காணப்படுகிறது. கொட்ட

1. **முஸிரிஸ்.** பெரியாற்றங்கரையிலிருந்த முசிறித் துறை.

2. **துண்டிஸ்.** கடலுண்டி என வழங்கும். இது சேர நாட்டு ஊர். பாண்டியருக்குச் சொந்தமான தொண்டி என்ற ஊர் கீழ்க்கடற்கரையிலுள்ளது.

3. **கிண்டா.** இது நெல்கிந்தா, மெல்கிந்தா, நெல்சிந்தே என்று பலவிதமாகக் கூறப்படுகிறது. இந்த ஊரின் உண்மைப் பெயரும் இருக்குமிடமும் தெரியவில்லை.

4. **கோட்டநரா.** குட்டநாடு. இது திருவாங்கூர் ராஜ்யத்தில் ஒரு பகுதியாக இருக்கின்றது.

நரிகோன் என்பது அந்த நாட்டில் விளையும் மிளகினது பெயராகும். டாக்டர் புக்கனன் என்பவர் இதனைக் கள்ளிக்கோட்டை நாட்டில் நல்ல மிளகு விளையும் இடமான கடத்தநாடு ஆகுமெனக் கருதுவர். தலைச்சேரியைச் சார்ந்ததாயும் மிளகுக்குப் பேர்போனதாயுமுள்ள குளத்தநாடு ஆகும்எனக் கருதுவர் பர்னல்ஆசிரியர். மலையாளமொழியில் கடத்த என்னுஞ் சொல் வண்டியைக்குறிக்கும்; நாடு என்னுஞ் சொல் ஊர் என்றாகும்.

18. சங்கர (Sangara) பெரிபுளூஸ் ஆசிரியர் ஒரே மரத்தில் குடையப்பட்டு கொட்டநராவிலிருந்து பரகே (Barace) வுக்கு மிளகு கொண்டுபோன படகுகளை இந்தப்பெயரால்அழைப்பர் இந்தப்படகுகள் மலையாள மொழியில் சங்ஙாடம் என்று சொல்லப்படும். துளுவில் ஜங்காலா என்பர். வடமொழி ஸங்காடம்-தெப்பம் என்பதை ஒப்பிடுக. குலந்தியோபோண்டா (Kolandio phonta) என்னும் பெயருடையதாய் மலையாளக் கரையிலிருந்து இலங்கைக்கும் கங்கைக்கும் சென்ற படகுகளின் பெயரை நிச்சயிக்க இயலவில்லை.

19. கோட்டியரா (Kottiara) ஆய்நாடு என்று தாலமியால்கூறப்பட்டதும் பரளியாஎன்றுபெரிபுளூஸ் ஆசிரியரால் கூறப்பட்டதுமான நாட்டிலுள்ளஊரின் பெயர். இது தென்திருவாங்கூராகச் சொல்லப்படுகிறது. பிளினியின்கொட்டோரா(Cottora)வாகும். பெதிஞ்சர் அட்டவணையிற் காணப்படும் கொட்டாரா (Cottara)வும் இதுவேயாகும். முன்கூறப்பட்ட கொட்டநராவையும் இதனையும் ஒன்றாக எண்ணக்கூடாது. இது தாலமியால் கோட்டியரா தலைநகர் என்று கூறப்பட்டு மிகவும் முக்கியமான பட்டணமாகக் கருதப்பட்டது. கோட்டார் என்று ஐரோப்பியர்களால் வழங்கப்படுவதும் தென்திருவாங்கூரிலுள்ள பிரபல வியாபார ஸ்தலமான கோட்டாறாகக் கருதப்படுகிறது.

இந்தச்சொல்லானது கோடு தமிழ் - மலையாளம் கோட்டை;ஆறு-நதி என்ற இருசொல்லாலான ஒரு பதம். முதற் சொல் பெயருரிச்சொற்பான்மைப் படுவதற்காக டா போன்ற எழுத்துக்களை இரட்டிப்பது தமிழ் மலையாள வழக்கு; மெல்லொற்று இரட்டிக்கும்போது அது வல்லொற்றாவது மற்றொரு விதி. ஆதலினாலேகோடு ஆறு கோட்டாறு என்று ஆயிற்று. இப்பொழுது கூறப்படும் ஊர் இதுதானென்றுஎனக்குத் தோற்றுவது உண்மையர்குமானால், இப்பொழுதைப் போல கிரேக்கர் காலத்திலும் இதே இலக்கணவிதி அமைந்திருந்தது என்பது வெளிப்படும்.

20. கோமரியா அக்ரோன் (Komaroia-Akron) தாலமி; கோமார், கோமரி(Komarei)-பெரிபுளூஸ். குமரிமுனையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் துர்க்கா பரமேசுவரியின் மறுபெயரான குமாரி என்னும் பெயரால் அந்த இடம் வழங்குகிறது. குமார் என்றுவழங்கும் இந்தச்சொல் சுத்தத்தமிழ்ச்சொல்லாகும். வழக்கில் குமாரீ என்பது குமரி என வரும். கொடுந்தமிழ் வழக்கில் (Vulgar) குமாரீ, குமாரி என்பன கன்னிப் பெண்ணுக்கு வழங்கவில்லை. ஆனால் அவைபோய், குமார் கோமார் என வழங்கும். இந்தக்கொடுந்தமிழ்ச் சொல் பெரிபுளூஸ் ஆசிரியர் காலத்தில் கேட்கப்பட்டது ஆச்சரியமுடையதாகும் ‘இதற்குப்பின்னர் குமார் என்று ஊர் இருக்கிறது; அதனில் ஒருகோட்டையுண்டு. கப்பற்சாலையும் ஒன்றுண்டு. அங்கே மக்கள் நீராடித் தங்களைத் தூய்மை செய்துகொள்ளுதற் பொருட்டு வருகின்றனர். அங்கே ஒரு பெண் தெய்வம் மாதந்தோறும் வந்து நீராடியதாகக்கூறப்படுகின்றது’ என்று பெரிபுளூவில் காணப்படுகின்றது. துர்க்காதேவியின் பொருட்டு மாதந்தோறும் இன்னும் நீராடப்பட்டு வரினும்முற்காலத்திலிருந்ததைப்போன்று அவ்வளவாக இப்பொழுது மக்கள் கூடுவதில்லை. ஐந்து நீராட்டுறைகளில்குமரியும் ஒன்றாக இருந்தமையால் பெரிபுளூஸ் ஆசிரியர் கூறுவது உண்மையுடையதேயாம். கன்னியாகுமரியில் கிரேக்கர்கண்ட கப்பற்றுறையும் கோட்டையும் கடல்நாட்டினுட் புகுந்ததால் இதுபொழுது காணாததாயிற்று. ஆயினும்கடலுள் காணப்படும் ஒரு பாறையில் நன்னீர்க்கிணறு ஒன்று காணப்படுகிறது. பெதிஞ்சர் அட்டவணையில் குமரிமுனை காணப்படாதது மிகுதியும் கவனிக்கத்தக்கது.

21. பரளியா. தாலமியால் சோரடிபரளியா, தோரங்கிபரளியா என இரண்டும், பெரிபுளூஸ் ஆசிரியரால் ஒன்றும் ஆக மூன்று பரளியாக்கள் கிரேக்க ஆசிரியர்களால் கூறப்படுகின்றன. பெரிபுளூவில் கண்ட பரளியா தாலமிகூறும் ஆய்நாடும் தென் திருவாங்கூர் கரையார்நாடும் (தென் திருநெல்வேலி) சேர்ந்தது. இது கொல்லத்துக்குத் தெற்கிலுள்ள செம்மலை முதல் குமரியுள்பட பாண்டியனுக்குச் சொந்தமான முத்துச் சலாபமிடும் கொற்கைவரையில் பரவியிருந்தது. பரளியா என்பதை டாக்டர் பர்னல் புரளி என்பதனோடு ஒப்பிடுவர். அது திருவாங்கூரின் பழய பெயரென்பர்; ஆயினும் இதனை நான் ஒப்பமுடியவில்லை. புரளி என்ற பெயர் திருவாங்கூருக்கு இருந்திருக்குமாயின் கிரேக்கர் பிறர் அறிந்து கொள்ளற்கு இயன்றவகையில் பொருள்படத்தக்க தாய்த் தம்மொழியி லாக்கிக்கொண்டிருப்பர்; இதற்கு மாறாக இந்தக்கரை அந்தப் பெயரால் ஒருபொழுதும் அழைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உள்நாட்டிலுள்ள கோட்டை யகம் என்ற ஊரின் அரசரது கோட்டையின்பெயர் என்று கூறுவர் மலையாள அகராதி ஆசிரியரான டாக்டர் குண்டர்ட். அதனாலே புரளிக்குத் தலைவன் என்று பொருள்படும் புரளீசன் என்பது இவர்களது பட்டங்களில் ஒன்றாயிற்று. இந்தப் பட்டம் திருவாங்கூர் அரசர்பேரிற் பாடப்படும் செய்யுள்களில் கூறப்பட்டு வருகிறது. சேரரது பழய இராசதானியான கரூர் என்னும் வஞ்சியைக் கைக்கொண்ட பின்னர் வஞ்சிபூபதி என்ற பட்டத்தைக் கைக்கொண்டதை யொப்ப, இந்தநாட்டைக் கைக்கொண்ட பின்னர் இந்தப்பட்டத்தையும் (புரளீசன் என்பதை) கைக்கொண்டிருத்தல்கூடும். பெரிபுளூவில் காணப்படும் பரளியாவில் தென் திருவாங்கூர் மாத்திரமின்றி கொற்கையுட்பட்ட தென் திருநெல்வேலியும் சேர்ந்தது என்பது நினைப்பிலிருக்கவேண்டும். ஆதலினாலே பரளியா என்ற சொல் கிரேக்கச் சொல் எனவும் அது கடற்கரை என்று பொருள்படும் ஒரு தமிழ்ச் சொல்லைக் குறிக்க எழுந்தது எனவும் கொள்ளவேண்டும். பின்வருவதினின்றும் இது நன்கு விளக்கமாகும்.

---

1. பரகே. வைக்கரை இதனைக்கண்டு கூறியவர் வே. கனகசபைப் பிள்ளையாவர்.

1935-ம் வருடத்திய வால்யூம் 8. அட்டவணை

(ஜனவரி முதல்—ஜூன் வரையில்)

தலையங்கம்

இதழ்.			பக்கம்.
1	கலாநிலயம்	...	1
2	உபாயத்தின் அபாயம்	...	17
3	இசையுடைய சீர்திருத்தம்	...	33
4	கட்வுட் சித்தம்	1	49
5	,,	2	65
6	,,	3	81
7	,,	4	97
8	,,	5	113
9	,,	6	129
10	,,	7	145
11	,,	8	161
12	வழியும் வகையும்	1	177
13	,,	2	193
14	,,	3	209
15	,,	4	225
16	சமயச்சேர்க்கை	1	241
17	,,	2	257
18	யாருக்கு?	...	273
19	இசையின் அசைவு	...	289
20	வெறும்வாய் மெல்லல்	...	305
21	வித்தகமும் வித்தைகளும்	1	321
22	,,	2	337
23	,,	3	353
24	,,	4	369
25	,,	5	385

கம்பராமாயணம்—கிஷ்கிந்தா காண்டம்

9. கார்காலப் படலம்

1	வேசியி லாசையால் சிரிக்குஞ் சித்திரம்...	6
2	அரசின் நினைவை யழைத்தா னல்லன் ...	27
3	வானவன் வழங்கிய சிலேடையி ஞட்டம் ...	39
4	கற்றோர் சீற்றங் காப்பத னருமை ...	61
5	கடுவனே சாலுங் கரி ...	67
7	வித்தகன் புலம்பல் விளைப்பது நகையே ..	99
8	சிறுநகை குலவத் திரிபுர மெரித்தான் ...	122
9	கம்பரும் நண்டுங் கதவடை கொண்டார்	137
10	மனுவின் நீதியோ மக்கள் மாயமோ ...	147

10. கிட்கிந்தைப் படலம்

11	தாரையிருந்த தகவிலாக் கோலம் ...	163
13	புலவரே சற்றே பொறும் ...	195
14	மாதாராள் மதியின் திறம்	211
16	தாரைக் கிதுவுந் தகவாமோ ...	247
17	வீரன் பிழையே தாரையின் பாக்கியம்...	259
18	இளையவன் சொற்கள் மெய்யே யாயின	275
19	ஆற்றுதார்க் கன்றோ சினம் ...	302
20	மதுவினால் மாய்ப்பரோ மற்று ...	310
21	சீற்றம் விட்ட நற்றகைச் செம்மல் ...	323
22	வந்தவர் யாரும் பரதனே யாவார்	346
23	ஆள்தலும் ஆடலும் இயல்பின் ஆயவே	365
24	யார்பணி யென்ன லருமை யாகுமே ...	371

நம்மாழ்வார் வைபவம்

இதழ்.		பக்கம்.
6, 7, 8, 10	—7-ம் பத்து, 3-ம் தசகம். "வெள்ளைச் சுரிசங்கு"	89, 107, 119, 150
11, 12.	,, 4-ம் தசகம் "ஆழியெழ"	168, 189
13, 14, 15.	5-ம் தசகம். கற்பார்	204, 215, 232
16, 17, 18,	6-ம் தசகம். பாமருமூவுலகு	252, 263, 283
19, 20, 21.	7-ம் தசகம். ஏழையராவி	297, 315, 325
22, 23.	8-ம் தசகம். மாயாவாமனனே	339, 355
24, 25.	9-ம் தசகம். என்றைக்கும்	373, 388

வில்லிபாரதம்

1, 2, 3, 4, 6, 7, 8, 9, 10, 11, 12	துரியோதனன்	9, 26, 43, 58, 90, 103, 126, 140, 154, 166. 184
15, 16, 19.	வீமார்ச்சுனர்	227, 243, 299
20.	துச்சாதனன் ...	314
24.	திட்டத்துய்மன் ...	374
25.	சாத்தகி ...	387

ஒத்தெல்லோ.

Shakspeare's—Othello.

1, 2.	அங்கம் 1.	களம் 1. ...	11, 19
3, 4.	,,	,, 2. ...	41, 53
5, 6, 7, 9, 10, 12.	,,	,, 3. ...	75, 90, 102, 134, 152, 181
13, 14, 15, 16, 17, 18	,, 2.	,, 1.	199, 216, 229, 249, 261, 277
18	,,	,, 2. ...	279
19, 20, 21, 22, 23, 25	,,	,, 3.	291, 307, 331, 348, 359, 390.

அணியிலக்கணம்.

1	முன்னுரை	...	14
2	பாவிக அணி—(பொதுவுரை)	...	29
3	,, இலக்கணம்.	...	37
4	,, ஒற்றுமை உபகாரம்	...	54
5	,, அடைமொழியமைதி, வருணனையனுகூலம், அரிய கருத்துக்கள்.	...	69
6	,, ப்ராத பருத்ரீயம், மாறனலங்காரம்	...	84
8	தன்மையணி(ஸ்வபாவோகத்தி)பொதுவுரை		
10	,, பொருட்டன்மை.	...	157
11	,, சாதி, குணம்.	...	171
12	,, தொழில்.	...	188

சூளாமணி

இதழ்.		பக்கம்.
2, 3, 4, 5, 6, 7, 8, 9, 12,.	இரதநூபுரச் சருக்கம்	25, 35, 51, 73, 83, 109, 118, 142, 179

சூரியன்

4	கதிரவன் ஒளி—தன்மையும் பயனும் ...	61
5	வடதுருவம்	72
6	பகலவன் உருவம்	87
7	”	105
8	வடிவமும் அமைப்பும்	120
9	நக்ஷத்திரசாலே ...	132
10	”	159
11	”	169
12	ஆராய்ச்சிக் கருவிகள் ...	185
13	”	202
14	சூரிய குடும்பம்	221
15	” புதன், வெள்ளி	238
16	” பூமி, சந்திரன்	254
17	” செவ்வாய்	266
19	இடைநிலைக் கோள்கள்—வியாழன் ...	295
20	” சனி	312
21	நிருதி, வருணன், குபேரன்	329
22	தூமகேதுக்கள், எரிநக்ஷத்திரம்	344
23	கிரகணங்கள்	361
24	பகல் நக்ஷத்திரம்	377
25	”	392

நரவாகனதத்த சரிதம்

15	தோற்றுவாய், முதல் சருக்கம், 2-வது சருக்கம் ...	233
16	மதனமஞ்சுகா லாபம் ...	244
17	வேகவதிலாபம், காந்தர்வதத்தைலாபம் ...	268
18	சாநுதாசன் கதை	281
19	அஜிநாவதிலாபம்	293
20	பிரயதர்சனுலாபம்	317

உதயண சரிதம்

21, 22.	... ...	326, 341

கலித்தொகை

இதழ்.			பக்கம்.
21	மருதக்கலி	1 வீங்குநீ ரவிழ்நீலம் ...	333
	”	2 கார்முற்றி யிணரூழ்த்த ...	334
22	”	3 பொதுமொழி பிறர்க்கின்றி	350
23	”	4 போதவிழ் பனிப்பொய்கை	366
24	”	5 மணிநிற மலர்ப்பொய்கை	383
25	”	6 விரிகதிர் மண்டிலம் ...	391

நவாலி - க. சோமசுந்தரப் புலவர் பாடல்கள்.

5	செந்தமிழ்ப் பிராட்டி வருகைப் பத்து ...	78
11	புளியந்தீவு நாகேசுரர் பதிகம் ...	174
20	நாமகள் தசாங்கம் ...	319
23	பருளாய் முருகர் பதிகம் ...	357

சிறுகதை, மலர்வனம், பழமுதிர் சோலை

13, 14	உருபு மயக்கம் (சிறு கதை)	206, 213
14	நன்றியோ நங்கா யிது (மலர்வனம்) ...	223
21	நல்லார்கட் பட்டதிரு (பழமுதிர்சோலை)	335

கம்பர் சிருட்டியிற் பிறந்த கற்பினுள்

13	அகலிகையின் பூர்வ விருத்தாந்தம், அழகு ...	201
14	அகலிகையின் கற்பு	218
15	”	236
16	”	250
17	”	265
18	அகலிகையின் தெய்வத் தன்மை ...	285

பிறவிடயங்கள்

1	பொதுமையின் அதிசயம்	3
1, 2	நகைச்சுவை	8, 23
2	நாராயணன் விளக்கமும் நாவுக்கரசரும்	22
3, 17, 18	காலத்தொனி ...	46, 270, 279
5	சான்றோர் கடன்	77
7, 8	பாரதியார் வேதாந்தப் பாடல்	110, 124
11	திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம்	165

காலரா மருந்து
IDL விண்டியூர்
ரூ. 1-8-0.
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கெர்ப்பாசய டானிக். ரூ. 2-0-0
சூதக டானிக். ரூ. 1-8-0
ஏமாற வேண்டாம்
நேரில் பெற்றுக்கொள்க
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை. 0-4-0
கோரோஜனை ” 0-6-0
பாலசஞ்சீவினி 0-4-0
ப்ரிலஸூதா டானிக் ரூ 1
40 நாட்கள் உபயோகப் பாக்கெட் அணு ஒன்று
IDL ச்யாவனப்ராசா IDL பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடபல்பொடி
சாதாரணம் பாக்கெட் IDL டீ. மெடிகேடட் டப்பி
ஜவரேக்
IDL ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
போலிகள் இருப்பதால் வீதிகளில் வாங்க வேண்டாம்

KALANILAYAM
REG. NO. M. 2324.

பிஸாரோ நாடகம்.

கலாநிலயத்தின் உதவிக்காக, ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் அவர்களின் முயற்சியால் சென்னையில் இந்நாடகம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. நாடகத்தைத் தம் தொழிலாகக்கொண்டுள்ள ஸ்ரீமான் P. S. வேலுநாயரவர்களும் ஸ்ரீமான் K. S. அனந்த நாராயண ஐயரவர்களும், கலாநிலயத்தின்பால் தாம் வைத்துள்ள உண்மை அன்பினால், யாதும் ஊதியம் வேண்டாமல் இதனில் கலந்துகொண்ட பெருந்தகைமையை நன்றியுடன் நினைத்து அவர்களுக்குஎம் வந்தனத்தைச் செலுத்துகிறோம். பற்பல உத்தியோகங்களிலிருக்கின்றன ஏனையநண்பர்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் இந்நாடகத்தைமுயன்றுபயின்றுற்சாகமுடன் தம் உதவியை உவந்தளித்தவகையினை நினைக்குங்கால் கலாநிலயத்தின் அன்பர்களது கூட்டுறவினால் விளைகின்ற மகிழ்ச்சி எமது உள்ளத்தில் நன்றியுடன் பெருகுகின்றது. நடித்தவர் தவிர, வேடங்களமைப்பதிலும் காட்சிகளை நடத்திவைப்பதிலும், கொட்டகை ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டதிலும், டிக்கட்டுகள் விற்றுத்தருவதிலும் எமக்கு உவகையோடு உதவிசெய்த ஒவ்வொருவருக்கும் எமது நன்றியும் வந்தனமும் உரியதாகும்.

இந்நாடகத்தை, மீண்டுமோர்முறை சென்னையிலும், காஞ்சிபுரத்திலும், காரைக்குடியிலும், வலையாப்பட்டிலும், கும்பகோணத்திலும், திருச்சிராப்பள்ளியிலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். அங்கங்குள்ள கலாநிலய நண்பர்கள் இதற்கு வேண்டிய உதவியை அளிப்பாரென்று நம்புகின்றோம். இந்நாடகத்தைப்பற்றிப் பத்திரிகைகள் தெரிவித்துள்ள சில கருத்துக்களை இங்குத் தருகின்றோம்:—

"சீரியநடையில் எழுதப்பட்ட சம்பாஷணை; கச்சிதமான பாட்டுக்கள், உயர்ந்த நடிப்பு, இம்மூன்றும் இந்நாடகத்திற்குச் சோபையைத் தந்தன."—சுதேசமித்திரன்.

"The actors, one and all, acquitted themselves well. Mr. Seshachalam Aiyar himself took the part of Pizzaro. He deserves congratulations on the way in which he played his part. His amateur friends in no way lagged behind him and their acting was highly commendable. Mr. Anantha narayana Aiyar adjusted himself to the new setting and interpreted the conflicting emotions of Elvira, the heroine of the piece. Mr. Velu Nair played the part of Alonzo to perfection.

—The Hindu.

......இது தமிழில் புதிய நாடகமாயிருப்பினும், கூட்டம் ஏராளமாக இருந்தது. இதில் எல்விராவாக நடித்த ஸ்ரீமான் அனந்தநாராயண ஐயருக்குத் தலைமை ஸ்தானம் கொடுக்கவேண்டும். ஸ்ரீமான் வேலு நாயரும் சிறப்பாக நடித்தார். ஸ்ரீமான் சேஷாசலம் ஐயர் முதன்முறையாக நாடகமேடையில்தோன்றினராயினும்அனுபவம்வாய்ந்த பழைய நாடகப் புலவர்போலவே பிஸாரோவேடத்தில் நடித்தார். ரோலாவாக நடித்தவரும் அற்புத நண்பனாக நடித்தார். பெருவியநாட்டு உயர்குல மாதானகோராவாக நடித்த அன்பர் முழுமையும் பெண்ணாகவே விளங்கினார். ஒரு சிற்றரசனாக வந்த, சேஷாசலனார் இளம் புதல்வரும் வியக்கத்தக்க முறையில் நடித்தார். இந்த நாடகம் அறிஞர்கள் விரும்பத்தகாத பேச்சோ நடிப்போ சிறிதுமின்றி உயரிய முறையில் நடந்தது. **—லோகோபகாரி.**

The story was moving and the acting was good. And a happy feature was that there was not much of irrelevant music. Ananthanarayana Aiyar acted the role of Elvira to perfection................ The heroic role of Rola was acted by a a young amateur who won universal applause. But the best piece of acting was from Mr. T. N. Seshachalam Aiyer who had taken up the difficult part of Pizzaro.

—Sunday Times.

"பரிகாஸம் செய்யவந்தவன் பிரார்த்தனை செய்துவிட்டுப்போனான்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதுபோல, தமாஷ் அனுபவிக்கச் சென்ற நான் "இதென்ன! நமது நாடகத்துக்குக்கூட நல்லகாலம் வந்துவிட்டதோ" என்ற வியப்புடன் திரும்பினேன்......நல்ல நாடகத்தில் சம்பாஷணை நிறைய இருக்கவேண்டும்; சக்தி பொருந்தியதாயிருக்கவேண்டும். இந்த நாடகத்தில் இந்த அம்சம் பூரணமாக இருந்தது......காட்சிகளை அமைப்பதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டிருந்தது. பெருவியரின் கோவில் காட்சியை ஓர் அற்புதம் என்றே சொல்லலாம். ஒரு சமயம் சூரியோதயத்தைக் காட்டினார்......கொட்டகைக்கு வெளியில் வந்ததும் என்னுடைய முதல் நினைப்பு என்னவென்றால், "இன்னொரு முறை இந்நாடகம் சென்னையில் நடந்தால் கட்டாயம் பார்க்கவேண்டுமென்பதே. இப்பொழுதும் அந்தஆவல் குறையவில்லை.

—ஆனந்த விகடன்.

Indo-Commercial Bank, Ltd.,

Mayavaram.

Capital, Reserves, etc., as at 30th August 1935 : Rs. 10,62,245.

BRANCHES :—

Madras Office :—

107, Armenian Street.

Bazaar Branch :—

260, China Bazaar Road.

Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.

SUB OFFICES:—

Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.

All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.

S. N. N. SANKARALINGA IYER,

Managing Director,

107, Armenian Street, Madras.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. **1**

இனும்! **"காம சாஸ்திரம்"** இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)